REGD M 4642

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 21–11–48 | இதழ் 23

அண்மையில் லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டுக்குச் சென்றிருந்த பல நாட்டு முதல்வர்கள், பக்கிங்காம் அரண்மனையில் அரசருடன் அளவளாவுகின்றனர். இடப்பக்கத்தில் இரண்டாவதாக இலங்கை முதல்வர் சேனநாயக்காவும் மூன்றாவது பாகிஸ்தான் முதல்வர் லியாகத்அலியும் வலப்பக்கத்தில் முதலாவதாகப் பண்டித நேருவும் நிற்பதைப் படத்தில் காணலாம்.

இதோ, நல்வழி!

14-ம் பக்கத் தொடர்ச்சி

அவர் பேரில் நம்பிக்கை இல்லை என்றும், அவர் M. L. A. பதவியை உடனே ராஜீநாமா செய்ய வேண்டுமென்றும்"

தீர்மானம் ஒன்றும் நிறைவேற்ற, பாளையங்கோட்டையிலும், திருநெல்வேலியிலுமாக இரு கூட்டங்களை (13-11-48ல்) கூட்டுவதாக விளம்பரம் செய்திருந்தார்கள். அவ்வாறு அறிவித்திருந்தவர்கள் பட்டியலை கீழே தருகிறோம். தோழர்கள்,

1. சு. துரைசாமி, பேட்டை காங்கிரஸ் ஊழியர்.

2. வி. கே. அப்துல்அமீது முனிசிபல் கவுன்சிலர்.

3. பி. சோமயாஜிலு, த. கா. க. அங்கத்தினர்.

4. வை. சிவராமன், முன்னாள் செயலாளர், நெல்லை ந. கா. க.

5. வி. சுப்பிரமணியஐயர், பாளையங்கோட்டை ந. கா. ச. தலைவர்.

6. டி. என். வேல், செயலாளர், பாளையங்கோட்டை ந. கா. கமிட்டி.

7. எம் ஆர் மேகநாதன், ஜில்லா கா. கமிட்டி அங்கத்தினர்.

இவ்வளவு காங்கிரஸ் தோழர்களும் கூட்ட விளம்பரத்தாள்களில் கையெழுத்திட்டிருந்தனர். நகரத்தில் 144 தடையுத்தரவு அமுலில் இருக்கிறது. எனவே, கூட்டங்களுக்கு அனுமதிகோரி, ஜில்லா மாஜிட்ரேட்டுக்கு காலையில் மனு கொடுத்தனர். கூட்டம் கூட்டுவதற்கு அனுமதியும் கிடைத்தது. ஆனால் மாலையில், காலையில் அனுமதி கொடுத்த அதே ஜில்லா மாஜிஸ்ட்ரேட், கூட்டம் கூட்டக் கூடாதெனக் கொடுத்த அனுமதியைப் பறித்துக் கொண்டார். ஆதலால், கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நிறைவேற்ற இருந்த தீர்மானமும், மற்ற விவரங்களும் 'தினசரி' 16-11-48 இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயகக் கோட்பாட்டிலே நம்பிக்கையும், அதன் கண்ணியத்திலே பற்றும், இருக்குமானால், பொதுமக்களின் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கண்டும், காரியம் பெரிதா வீரியம் பெரிதா, என்று இராமல், இவர்கள், தமது பதவியை ராஜிநாமாச் செய்யவேண்டும், அதுதான் குணவான்களுக்கு அழகு! போலீசை விட்டு விரட்டுவேன்—கலெக்டரைக் கொண்டு தடுப்பேன்—போட்டிக் கூட்டம் போட்டுக் கலகமூட்டுவேன்—எதையோ செய்து, இடத்தை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொள்வேன்—அட்டைபோல ஒட்டிக்கொள்வேன் என்று எண்ணுபவர்களை, ஜனநாயகக்கோட்பாட்டை உணராதவர்கள், என்று மட்டுமல்ல, சாதாரண மனிதத் தன்மையையும் மறந்தவர்கள் என்றே அறிவுலகம் கருதும்.

அருப்புக்கோட்டை! திசையன்விளை! திருநெல்வேலி!—எச்சரிக்கைகள்! அபாயஅறிவிப்புகள்!! ஆம்! ஆளவந்தார்கள் அறிய வேண்டுகிறோம். தம்மை வீழ்த்த ஒரு எதிர்க்கட்சி இல்லாதிருக்கலாம்! உண்மையைக் கூறுவோரைப்போட்டு அடைக்கச் சிறை இருக்கலாம்! ஆனால், பொதுமக்களே முன்வந்த பிறகு என்ன செய்யப்போகிறார்கள்! அருப்புக்கோட்டையும் திசையன்விளையும், இனி பற்பல இடங்களிலும் தோன்றும் — தோன்றவேண்டும் — பொதுமக்களுக்கு, அந்த உரிமை உண்டு—நாடு வாழ, அதுதான் வழி! விழிப்புற்ற சமுதாயத்திலேதான் ஜனநாயகம் வளரும்! மந்தமதியினரும், சொந்தப் புத்தியைச் சோரம் போகவிட்டவர்களும், அதிகமானால், மக்களாட்சி முறை என்பது மந்தியிடம் சிக்கிய மலர் மாலையாகும். மக்கள், ஒருசில இடங்களிலேனும், இந்த அளவு, விழிப்புணர்ச்சியும் வீரப்போக்கும் கொண்டனரே, என்றுகளிக்கிறோம். வாழ்க ஜனநாயகம் என்று கூறுகிறோம். வாழ்த்துகிறோம், உரிமையை இழக்க மறுக்கும் அந்த உண்மையாளர்களை! மற்றவர்களுக்குக்காட்டுகிறோம், இதோ நல்வழி—ஜனநாயகம் பிழைக்கும்வழி, என்பதை!!

சட்டசபைக் கூட்டத்துக்குப் போகுமுன்பு, கூட்டம் போட்டுக் கவனப்படுத்துங்கள், அந்தச் சிங்கார புருஷர்கள் செய்ய மறந்ததை—செய்யவேண்டியதை! கூட்டம்முடிந்து, வீட்டுக்கு வந்ததும், கூட்டம் போட்டுக் கேளுங்கள், "போனாயே புண்யவானே! என்ன செய்தாய்! எமது குறையை எடுத்துரைத்தாயா? ஏதேனும் கவைக்குதவும் காரியம் செய்தாயா?" என்று கேளுங்கள். உமக்கு அந்த உரிமை உண்டு! அவர்கள் ஊராள்வது, உங்களிடம் அதிகாரம் பெற்றுத்தான்!

●

விரைவில் வெளிவருகிறது!

சி. என். ஏ. எழுதிய

"வாழ்க்கைப் புயல்"

விலை: 0—12—0

சூதாடி, கள்ளன், கைதி, விபசாரி

முதலிய சிறு கதைகள் கொண்ட ஏடு!

டிம்மி அளவில் 56-பக்கங்கள் கொண்டது

" சிந்தனை விருந்து "

சிந்தனைக்கும் கருத்து வளர்ச்சிக்கும்

ஏற்ற சம்பவங்கள் கொண்டது.

32-பக்கங்கள். விலை: 0—4—0

கிடைக்கும் இடம்:—

பரிமளம் பதிப்பகம்

54. வரதுவாசல் தெரு

காஞ்சிபுரம்.

இதோ, நல்வழி!

ஆளைப்பார்க்காதே! அஹிம்சா மூர்த்தியின் படத்தைப்பார்! "ஓட்டு" அவருக்கு! அதைத் தெரிந்துகொள்.

என்ன செய்வார்? என்ன சாதிப்பதற்காக இவர் போகிறார்? இவருடைய திட்டம் என்ன? திறமை எப்படிப்பட்டது? என்றெல்லாம் கேட்காதே! இவர், காங்கிரஸ்கட்சி— அவ்வளவுதான் நீ தெரிந்துகொள்ள வேண்டியது — மற்றவை பற்றி எண்ணி மனதைக் குழப்பிக் கொள்ளாதே!!

இவருக்குப் போடும் "ஓட்டு" இவருக்காக அல்ல—காங்கிரசுக்காக! —இவர், முன்பு "ஒருமாதிரி" ஆளாக இருந்தாரே — வட்டித்தொழிலால் கொழுத்தவராச்சே—அதிகாரிகளிடம் குயிலாகி, ஏழைகளிடம் குக்கலாகி, விடும் குணவானாயிற்றே!— என்றெல்லாம் யோசிக்காதே! இவர் இப்போது காங்கிரஸ் கட்சி—சாக்கடைத் தண்ணீரானாலும், கங்கையில் கலந்துவிட்டால், 'பரிசுத்தமான புண்ணிய தீர்த்தம்' என்பதை மறவாதே!

நெடுங்காலமாகக் காங்கிரசில் ஈடுபட்டு, நாட்டுக்கு உழைத்த பலருடைய கோரிக்கைகளைக் குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டு, இவருடைய பணபலத்தின் மீது ஏற்பட்ட பாசத்துக்குக் கட்டுப்பட்டு, காங்கிரஸ் கமிட்டி இவரைத் தேர்தலில் அபேட்சகராக நிறுத்திவைக்கிறதே, இது அனியாயமல்லவா, என்று பேசாதே! காங்கிரஸ் முத்திரையை இவர் 'தேசசேவை' டைரியைக்காட்டி அல்ல, தமது 'செக்புத்தகத்தை'க் காட்டிப் பெற்றாராமே, என்று பேசாதே!

எப்படிப்பட்டவரானால் உனக்கென்ன! என்னென்ன செய்து காங்கிரஸ் முத்திரையைப் பெற்றிருந்தால் தான் உனக்கென்ன! ஏன், அவைகளைப் பற்றி யோசிக்கிறாய்! அவருக்கு எப்போது காங்கிரஸ் முத்திரை விழுந்துவிட்டதோ, அப்போதே அவர், 'உங்கள் ஓட்டுக்களை'ப் பெறும், யோக்யதையைப் பெற்றுவிட்டார், என்பது பொருள்! இதிலே வாதத்துக்கு இடமில்லை!

* * *

தேர்தல் காலத்திலே, இதுபோலப் பேசித்தான், 'வெற்றி' பெற்றனர். தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம், அந்தத் திருவாளர் என்ன நன்மையைச் செய்யப்போகிறார், அவருக்குள்ள ஆசாபாசங்கள், யாவை, திறமை அனுபவம் என்ன, என்பது பற்றிய நினைப்பே, மக்கள் மனதிலே இருக்கமுடியாதபடியான, பிரச்சாரம் நடைபெற்றது. இது, ஒரு கட்சியின் மகத்தானவெற்றிக்கு உதவிற்று—ஆனால் அதே வெற்றி, பொதுமக்களின் நலனைக்கோரி அமைக்கப்பட்ட மக்களாட்சி முறைக்கு ஊறுசெய்தது. காங்கிரஸ் கட்சி வெற்றிமாலை அணிந்தது— மக்களாட்சி முறைக்கு அதுவே மரண ஓலையாகவுமாகிவிட்டது.

* * *

சில 'தொகுதிகளில்', காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களின் 'அறிவுச் சூன்யத்தை'ப்பற்றி, மக்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே, "ஓட்டு" அளித்தனர்— காரணம், அவர்கள், தாங்கள் தரும் 'ஓட்டு' அந்த ஆசாமிக்கு அல்ல, காங்கிரஸ் கட்சிக்கு—என்று நம்பினர்-நம்பும்படி செய்யப்பட்டனர்.

* * *

'இது வெறும் "கைகாட்டி" தானேப்பா!'

"கல்லுப்பிள்ளையார் போல இருக்கும்—வாயைத் திறக்காது"

"திறவாமலிருந்தால் தானய்யா நல்லது! திறந்தால், தெரிந்துவிடும், இது வெறும், பாண்டம் என்பது!',

"ஆம்மாம், ஆமாம்! புகையிலை விரித்தால் போச்சு!" புண்யவான் பேசினால் போச்சு!

"உப்புச் சத்யாக்கிரகத்தின் போது, இந்த ஆசாமி, காங்கிரசைக் கண்டபடி திட்டிக்கொண்டு இருந்தாரே........"

"இப்போது எப்படிக் காங்கிரசில் சேர்ந்தார் என்று கேட்கிறாயா? இது தெரியவில்லையா உனக்கு! காங்கிரசிலே சேர்ந்தால்தான், சட்டசபைக்குப் போகமுடியும் என்பதனால் தான்."

"அதுசரி—இப்படிப்பட்ட ஆளை, ஏன் காங்கிரஸ் கட்சி, சேர்த்துக் கொண்டது"

"ஊரிலே பெரிய ஆள்—பணக்காரன் என்பதனாலே தான்"

"பாவம்! பண்டாரி, படாதபாடு பட்டுவந்தான் காங்கிரசுக்கு— அவனை நிற்க வைத்திருக்கலாம்"

"ஆமாம்! அவன்கூடக் கேட்டானாம்—கெஞ்சினானாம்!"

"கடைசியில், 'எதற்கும் உதவாததை'ப் பிடித்து நிற்கவைத்துவிட்டார்கள்."

"இது போய், அங்கே என்ன செய்யும்!"

"செய்வதாவது, மண்ணாவது! தூக்கு கையை, என்றால் தூக்கும்! மற்ற நேரத்தில் தூங்கி விழும்!"

* * *

பல தொகுதிகளிலே, பொதுமக்கள் இதுபோலப் பேசிக்கொண்டனர்—அபேட்சகர்களின் 'யோக்யதாம்சங்களை'ப்பற்றி, 'ஓட்' மட்டும், போட்டனர் — ஆளுக்காக அல்ல, கட்சிக்காக. இது கட்சிக்குள்ள சக்தியை, பிரசாரத்துக்குள்ள பலத்தை விளக்கிற்று—ஆனால் அதேபோது, மக்களாட்சி முறையின் மாண்பையும் மாய்த்து விட்டது. குன்றின் மீது மூலிகையும் உண்டு, முள்ளும் உண்டு! ஆனால் குறைமதியாளர் தவிர மற்றையோர், குன்றின்மீது உள்ளதெல்லாம் மூலிகை என்று கொள்ளார்—மூலிகை இது, முள் அது, என்று பிரித்து எடுத்துப் பயன்படுத்துவர்! ஆனால் 'குன்றுக்கு' ஒரு 'மகிமை' கற்பித்து, அதன்மீது இருக்கும் 'எதை' எடுத்து உபயோகித்தாலும் 'புண்யம்' என்று கூறிவிட்டால், பெரும்பாலான மக்கள், மூலிகையா முள்ளா, என்று ஆராய மாட்டார்கள், கிடைத்ததைக் கொண்டு களிப்படைவர். அது போலாயிற்று, தேர்தல்! யாரும் 'வாமுடிந்தது' முலாம்பூசிக்கொண்டதும்!

* * *

மக்கள் அளித்த 'ஓட்டு' தமக்கு அல்ல, தம்மைத்தழுவி உள்ள கட்சிக்கு—என்பது, அபேட்சகர்களுக்கும், ஒரு அசட்டுத் தைரியத்தைக் கொடுத்தது—யாரும் தம்மை ஏதும் கேட்க முடியாது, என்ற தைரியத்தை! அவர்களில் பலர், வெளிப்படையாகவே "எனக்கா 'ஓட்டு' தந்தனர்—என்ன செய்தாய், ஏது செய்தாய் என்று என்னைக் கேட்க! காங்கிரஸ் கட்சிக்குத் தந்தனர்!!" என்று பேசிக்கொண்டனர்.

தேர்தல் முடியும் வரையில், இந்தக்கருத்தை அடக்கத்துக்குப் பயன்படுத்தினர், பிறகு, ஆர்ப்பரிப்புக்குப் பயன்படுத்தினர். "நான் சாமான்யன்—எனக்காக ஓட்டு கேட்கவில்லை—மகத்தான காங்கிரஸ் கட்சிக்காகக் கேட்கிறேன்" என்று அடக்கமாகப்பேசி 'ஓட்டு' பெற்றனர்—பிறகு, "என்னய்யா இது, ஓயாமல் வந்து, என்பிராணனை வாங்குகிறாய்! ஓட்டு போட்டேன் ஓட்டு போட்டேன் என்று சொல்லிச் சொல்லி, பாத்யதை கொண்டாடுகிறாய்! இதோபார்! நீ, ஒன்றும் எனக்குப் போடவில்லை ஓட்டு! தெரிகிறதா? காங்கிரஸ் கட்சிக்குப்போட்டாய். ஆமாம். போய், உன்குறைகளைக் கட்சியிலே, சொல்லிக்கொள்—போக்கும்படி சொல்லு—இங்கே வந்து என் உயிரை வாங்காதே, போ" என்று கடுகடுப்புடனும் பேசலாயினர். மக்களாட்சி கேலிக்கூத்தாக்கப்பட்டது. பெரும்பாலான தொகுதிகளில், பொதுமக்களுக்கு, 'ஓட்டு' பெற்றுக்கொண்டு போய், வெல்வெட்மெத்தைமீது உட்கார்ந்துகொண்டிருக்கும் 'உயர்ந்தவர்களின்' உருவம் கூடச்சரியாகத் தெரியாது! தாங்கள் சில ஆண்டுகளுக்குமுன்பு, மஞ்சள் பெட்டிக்கு 'ஓட்' போட்டது தான், பெரும்பாலான மக்களுக்கு நினைவிலிருக்கிறது! இப்படி, பெட்டிக்குள் புகுந்துகொண்டுசட்டசபை சென்ற 'பெருமான்களின்' ஆட்சியிலே தான் நாடு இருக்கிறது

* * *

கழைக்கூத்தாடி, நாம் நமது கழுத்து வலியெடுக்கும் விதமாகப் பார்க்க வேண்டிய அளவு உயரமுள்ள கம்பின்மீது ஏறிக்கொண்டு, ஆடிக்காட்டுகிறான்—கயிற்றின்மீது ஓடிக்காட்டுகிறான்—கத்திகொண்டு வயிற்றில் குத்திக்காட்டுகிறான். காணும் நாம், கைகொட்டுகிறோம்—சபாஷ் கூறுகிறோம்—ஆச்சரியமடைகிறோம்—அவன் திறமையை மெச்சுகிறோம்; அதுகேட்டு அவன், "என் திறமையைக்கண்டீர்களல்லவா! இப்படிப்பட்ட என்னை ஏன் நீங்கள் உங்கள் ஊர்த்தலைவனாகக் கொள்ளக்கூடாது!" என்று கேட்கமாட்டான்—கேட்கத்துணிந்தால் கம்பின்மீது ஏறி வித்தைபல செய்தவன், தரையின்மீது நிற்கவும் முடியாதபடி, புத்திகற்பிக்கும் வித்தையில் மக்கள் ஈடுபடுவர்! வைத்தியத்தில் நிபுணர் ஒருவர்—ஆனால் அதற்காக அவரிடம் நோயாளியைக்கொண்டு போய்க் காட்டுவார்களே யொழிய, இடிந்த பாலத்தைக்காட்டி, இதை எப்படிப் புதுப்பிப்பது என்று கேட்கமாட்டார்கள்! நூலில் உள்ள சிக்குகளைச் சுலபத்திலே நீக்கும் நிபுணர் இவர், இப்படிப்பட்டவருக்கு, எதுதான் சாத்யமாகாது, எல்லாம் செய்யவல்லவர், என்று எண்ணமாட்டார்கள். போருக்குப் பயன்படும் 'வீரன்,' சோறு செய்யப் பயன்பட்டே தீருவான், ஏனெனில் அவன் அவ்வளவு தீரமாகப் போராடியவன் என்று கருதமாட்டார்கள் — ஏமாளிகள் தவிர. ஒரு துறைக்குத் தேவையான பண்பும் பயிற்சியும் பெற்று நிபுணராகிவிடுபவரைக்கொண்டு, எல்லாத் துறைகளிலும் பணிபுரிய வைத்துப் பயன் காணலாம், என்று எண்ணுவது பேதைமை. ஆலும் வேலும் பிளக்க உபயோகமாகும் கோடரி, வாழைக்குப் பயன்படுவதில்லை! பாறையைப் பிளக்கும்உளிகொண்டு, பச்சைக் காய்கறியை நறுக்கமாட்டார்கள்! ஒவ்வோர் துறைக்கும், ஒவ்வோர் செயலுக்கும், ஏற்ற, தேவையான, திறனும் கருவியும், வேறு வேறு! ஒன்று, மற்றெல்லாவற்றுக்கும் பயன்படும் என்று எண்ணுவது ஏமாளித்தனம். ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் போர் புரியும் பயிற்சியும் பக்குவமும் பெற்ற ஒரு கட்சி, நாட்டை ஆளவும், பயன்பட்டே தீரும்—போரில் பெற்ற வெற்றி போலவே, ஆள்வதிலும் வெற்றிகிடைக்கும், என்று எண்ணுவது, 'தேசியமாகக்' கருதப்பட்டது! அதனாலேதான், யாரும் வரமுடிந்தது-ஏதும் செய்யாதிருக்கும் போக்கு வளர்ந்தது—மக்களாட்சி முறை கேலிக்கூத்தாயிற்று.

* * *

பெரும்போர் முடிந்ததும் படைகலைக்கப்படுகிறது—சமையல் காரியம் முடிந்ததும், நம் வீட்டு அடுப்பு நெருப்பைக்கூடத்தானே அணைத்து விடுகிறோம்! அதுபோலவே, ஏகாதிபத்ய எதிர்ப்புக்காகவெனத் திரட்டப்பட்ட 'படை'யை, அந்தக் காரியத்துக்கு மட்டும் பயன்படுத்திக்கொண்டு, பிறகுகலைத்துவிட்டிருக்க வேண்டும்—ஆனால், நடந்தது வேறு—விபரீதமானது — அந்தப் படை கலைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, மக்களின் வாழ்வு, அந்தப் படையிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது மட்டுமல்ல, அந்தப் படைக்கு என ஏற்பட்ட சின்னத்தைப் பொறித்துக்கொண்டு கிளம்பிய கழுகுகளை எல்லாம் கிளிகளெனக் கருதிக்கொண்டனர் மக்கள்—நயவஞ்சகர்கள் பலர், அந்தச் சின்னத்தைப் பொறித்துக்கொண்டு, நாடாளும் வாய்ப்பைப் பெற்றனர்! கிளிக்கென இருந்த பொந்துக்குள் கருநாகம் குடிபுகுந்த கதை போலாயிற்று! நல்லாட்சி முறை பற்றிய அக்கறை அடியோடுஅழியலாயிற்று. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கதர் உள்ள போதே தேடிக்கொள்—என்று, இலாப வேட்டை ஆடக் கிளம்பிவிட்டனர், சட்டசபை சென்ற சிலர்கள்! பொறுப்புள்ள தலைவர்கள் பயப்படும் அளவுக்கு, நற்குணவான்கள் கதறும் அளவுக்கு, பதை பதைக்கும் நெஞ்சினர் பட்டினி கிடக்கும் அளவுக்கு, கமிட்டிகள் அமைத்து விசாரணை செய்ய வேண்டிய அளவுக்கு, இலாப வேட்டை வளர்ந்துவிட்டது.

* * *

சட்டசபை சென்றுள்ளவர்களிலே 'பலவகையினர்' உள்ளனர், அவர்கள் ஒரே கட்சியினர், என்ற போதிலும்! பல வகையினர், என்றால், அவர்களின் நிறம், நிலை, இவை பற்றி அல்ல, நாம் குறிப்பிடுவது, அரசியலைப்பற்றி, மத இயலைப் பற்றி, சமூக பொருளாதார இயல்களைப்பற்றி, பல்வேறு வகையான எண்ணங்களைக் கொண்டவர்கள், சென்றிருக்கிறார்கள். மக்களாட்சி முறையில், பல துறைகளிலே உள்ள கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுதான் கட்சிகள் அமையும். கிராமங்கள் நகரங்களாக வேண்டும், என்று கொள்கை கொண்டோர்

(13-ம் பக்கம் பார்க்க)

விஞ் ஞானக்கண் ★

ஒரு முகம், எட்டுக்கரங்கள்! பொன்னிறமான உடல்! பொற்பட்டு அணிந்து, பொன்னாபரணம் பூண்டு, கரங்களில், தூபம், கமலம், கமண்டலம், மணி, ஜெபமாலை, ஆகியவைகளை ஏந்தியவண்ணம், ஒற்றைச்சக்கரமுள்ள தேரில், வெண்தாமரையைப் பீடமாக அமைத்து அதன்மீது அமர்ந்து, மேருமலையின் இடப்புறமிருந்து கிளம்பி, அதனை வலம் செய்து, இந்திரபட்டினம், யமபட்டினம், வருணன், சோமன் ஆகியோரின் பட்டினங்களைத் தாண்டி, மீண்டும் இந்திரப்பட்டணம் திரும்புவான்! தேருக்கு சக்கரம் ஒன்று—குதிரைகள் ஏழு!!

தேரிலே, இவ்விதமான கோலத்துடன், சூரியதேவன், கிளம்பும்போது, புலத்தியன், புலகன், வசிட்டன், அங்கிரா, கௌசிகன், பரத்வாசன், பிருகு, கிருது, கௌதமன், காசிபன், சமதக்னி, அத்திரி, என்போர், மாதத்துக்கு ஒருவராக வந்திருந்து தோத்திரம் செய்வர்.

கங்கன், தக்கன், நாகன், கம்பளாச்சுவன், நீரன், ஐராவதன், ஏலாபத்திரன், கார்க்கோடகன், சங்கபாலன், தனஞ்சயன், பரமன், வாசுகி, எனும் நாகங்கள், ஒவ்வொன்றும் ஒவ்வொருமாதம், முறைவைத்துக்கொண்டு, ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட அந்த ஒற்றைச்சக்கரத்தேரை இழுப்பார்கள்!!

இவ்வளவுமட்டுமா! தேரின் முன், ஆடல்பாடலும் உண்டு. மாதத்துக்கொருவராக முறைவைத்துக் கொண்டு, ஊருணயு, தும்புரு, நாரதர், ஆஹா, ஊஹூ, விசுவாவசு, இருதிராட்டிரன், சூரியன், வாச்சன், உக்கிரசேனன், வருசி, சித்திரன், காந்தரு, என்பவர்கள் பாடுவர், கிருகத்தலை, சிகத்தலை, மேனகை, சகசந்நிசை, பிரமலோசத்தி, அநுமுலோசை, கிருதாசி, விசுவாசி, உருப்பசி, பூர்வசித்தி, திலோத்தமை, அரம்பை, எனும் அழகிகள் ஆடுவர்! நாள் தோறும், தேரேறி, மேருவை வலம் செய்யும், ஓயாதவேலை இருக்கிறதே என்பதற்காகச் சூரியதேவன் குடும்பகாரியத்தைக் கவனிக்காமலிருந்து விட்டார், என்று எண்ணிவிடாதீர்கள். அவருக்குத் தேவியார் இருவர்!—ஒருவரிலிருந்து மற்றொருவர் தோன்றினர். சஞ்ஞாதேவியாரைச் சூரியதேவன் தாரமாகக் கொண்டு, எவ்வளவோ வேலைகளுக்கிடையில், வைவச்சுதமநு, யமன், யமுனை ஆகிய குழந்தைகளுக்குத் தகப்பனானார். மூன்று குழந்தைகளை ஈன்றெடுக்குமட்டும், சஞ்ஞாதேவிக்குக் காதல் தென்றலாகி, சூரியனுடைய கனலைத்தாங்கும் நிலையைத் தந்தது போலும்! பிறகோ, தேவியார், சூரியனின் வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் தவித்து, தன் 'சாயலை' ஒரு பெண்ணாக்கிவைத்துவிட்டுத் தாய்வீடு சென்றுவிட்டார்! சூரியதேவன், அந்தச் சாயாதேவியுடன் சரசசல்லாபமாகவே இருந்து வந்தார்—வேறு மங்கை என்று அறியாமலேயே.

சிலகாலம் சென்றபிறகே, தன் சரச சல்லாபத்துக்கு இடமளித்து வரும் இன்பவல்லி, சஞ்ஞாதேவி அல்ல, சாயாதேவி, என்பது சூரியதேவனுக்குத் தெரிந்ததாம். தெரிந்ததும், தேவியைக் தேடிக்கொண்டு சென்றார்—அம்மையார், யாதுகாரணம் பற்றியோ பெண்குதிரை உருவெடுத்து, ஏதோ ஓர் மலைச்சாரலில், தவமிருந்து கொண்டிருந்தாராம். கண்டதும் சூரியதேவன், "தேவி இது என்ன கோலம்! என்னை விட்டுப்பிரிந்தகாரணம் என்ன?" என்று கேட்டாரா? இல்லை! அவரும் உடனே, ஆண்குதிரை உருவெடுத்து, குதிரையம்மையைத் துரத்தினார்! அது வெறும் வேட்டையாகவில்லை—காதல் விளையாட்டாகி, சூரியக்குதிரையின் நாசியிலிருந்து வீரியம்ஒழுக, அசுவினி தேவர்கள் பிறந்தனர்!

* * *

இது, நம் நாட்டுச் சூரியன்! ரிஷி சிரேஷ்டர்களும், தவமுனிவரும், வேத வித்தகரும், கண்டறிந்த உண்மை!

ஆஹா! ஊஹூ! பாட, அரம்பை ஊர்வசி ஆட, ஒற்றைச்சக்கரத் தேரேறி, சுற்றிவருபவர், சூரியதேவன்!

இந்த 'உண்மை'யைக் கூறினவர்கள், சாமான்யர்களென்று அல்ல, சகலகலா வல்லவர்கள் என்று மட்டுமல்ல, மும்மலமடக்கி மூலத்தைக் கண்டறிந்த, கடவுளுடன்தோழமை பூண்ட தூயவர்கள, என்று கூறப்படுகிறது. ஊனக் கண்களுக்குப் புலனாகாத உண்மைகளை அவர்கள் தமது ஞானக்கண்களால் கண்டறிந்தனர், என்று கூறப்பட்டு, நம்பப்பட்டு வருகிறது. சூரியதேவனுக்கு வழிபாடும், அதற்கான முறையும் வகுக்கப்பட்டிருக்கிறது.

அவர்கள்கண்ட சூரியனுக்கு ஒரு முகம், எட்டுக்கரம்! ஞானக்கண்ணினர் கண்ட காட்சி, கோலாகலமானது! ஏழுகுதிரைகளும் இழுக்க, பாம்புகளும் கூடச்சேர்ந்து இழுக்க, ஆடல்பாடலுடன், அந்தத்தேர், மேருவை வலம்புரிவதைக் கண்டனர்—கண்டோம் என்று கூறினர்—சரி, என்று ஒப்புக்கொண்டனர் மக்கள்—ஒப்புக்கொண்டவர்கள் உத்தமர்களெனப்பட்டனர், சந்தேகித்தோர், நாத்தீகர் என்று நிந்திக்கப்பட்டனர்.

* * *

இனி, ஞானக்கண்ணினர் கண்ட சூரியன், இன்றைய விஞ்ஞானக் கண்ணினருக்கு எப்படிக் காட்சி அளிக்கிறான், என்பதைக் கவனிப்போம். கவிக்கவேண்டியதற்குக்காரணம் பல, அதிலே மிகமுக்யமானது இப்போது நாம் வாழும் நாட்களில், ஞானக்கண்ணினரின் உதவியை அல்ல, விஞ்ஞானக் கண்ணினரின் உதவியையே, பெரிதும் பெறுகிறோம். இரு 'கண்ணினருக்கும்' உள்ள மாறுதல், ஒருபுறமிருக்க, வேறோர் உண்மையை உணர வேண்டுகிறோம். ஞானக்கண்ணினர், கண்டதாகக்கூறும் சூரியதேவனின் கோலத்தை, இங்கே உள்ள பாமரர் மட்டும் தான் ஏற்றுக்கொண்டுள்ளனர்—உலகிலே வேறெங்கும், சூரிய

னுக்கு உள்ள கரம் எட்டு, முகம் ஒன்று, தேவி இரண்டு, என்று கூறுவார் இல்லை. இங்கேயும், ஞானக் கண்ணினர் காட்டிய சூரியனை, நம் வீட்டுப்பள்ளிச்சிறுரும், காண்பதில்லை. அவர்களும், அகில உலகிலேயும் உள்ள சாதாரண அறிவுள்ளவர்கள் அனைவருமே, வேறோர் சூரியனைத்தான் காணுகிறார்கள்.

* * *

ஞானக்கண்ணினர் கண்ட சூரியன் தேர் ஏறிச்சுற்றும் ஒரு தேவன்! விஞ்ஞானக்கண்களுக்கு, தேவனும், தேரும், சக்கரமும் தெரியவில்லை— அவர்கள் காண்பது, சூரியன் எனும் ஒரு கோளத்தை — அதிலும் மேருவைச்சுற்றிவரும் காட்சியை அல்ல, பலகோளங்கள் தன்னைச் சுற்றிவரும் நிலையில் உள்ள சூரியனைக் காண்கிறார்கள். ஞானக்கண்ணினர், கண்டதாகமட்டுமே கூறினர், கருத்துக் குழம்பிஇருந்தகாலத்தில். இந்தவிஞ்ஞானக்கண்ணினர், தாம்கூறுவதைக் கண்டவர்கள், மட்டுமல்ல, காட்டுபவர்கள், புண்யவான்களுக்கு மட்டும் தெரியக்கூடிய மந்திர உச்சாடனத்தால் அல்ல, அதற்கேற்ற விஞ்ஞானக்கருவியின் துணைகொண்டு, "பார்க்கலாம்! நீ கூறும்விதமாகவா சூரியன் இருக்கிறது" என்று இங்குள்ள, சாதாரண மடிசஞ்சிகூட, அறை கூவிக்கேட்டால், 'வா அப்பா!' என்று அழைத்துச் சென்று, நுண்ணறிவினர் தயாரித்த தொலைநோக்கிக் கருவியின்மூலம், கோளங்களைக்காண வைக்கமுடியும்! "எட்டுக் கரத்திலே, நாலுமட்டும் தெரிந்தால் கூடப்போதும்! ஏழு குதிரைகளில் மூன்று தெரிந்தால்போதும்" என்று எவ்வளவு கெஞ்சினாலும், கூத்தாடினாலும், கேலிக்குரலில் கூறினாலும், அறைகூவி அழைத்தாலும், இங்கே உள்ள சங்கராச்சாரியாரோ, தம்பிரானோ, வேதாந்தியோ, மதவாதியோ, சூரியதேவனைக் காட்டமுடியாது! ஏனெனில், ஆஹா! ஊஹூ! பாடிட, அரம்பை ஊர்வசி ஆடிட, அரசு செலுத்தும் சூரியதேவன், என்பதுமூடநம்பிக்கை-மூலாம்பூசப்பட்ட மூடநம்பிக்கை. உலகம் ஏற்குமா, இந்தக்கூற்றை! பாமரர் மனதிலே, இந்த மூடநம்பிக்கையைப் புகுத்திய சூது மதியினர், சொரணை உள்ளவர்களானால், விஞ்ஞானச் சூரியனை விரட்டவேண்டாமா, ஏட்டிலிருந்து, அறிஞர் எண்ணத்திலிருந்து! தத்தமதுவீட்டுச் சிறுவர்களின் மனதிலிருந்தேகூட ஓட்டமுடியாதே, விஞ்ஞானச் சூரியனை!

* * *

ஆகாயவெளியில் காணப்படும் அண்டங்களுக்குள், சூரியனும் ஒரு கோளம். இதை அக்னிமேகங்கள் சூழ்ந்திருக்கின்றன. இதனை நடுவாகக்கொண்டு எட்டுக்கிரகங்கள்சுற்றிவருகின்றன. அவைகள் புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரானஸ், நெப்ச்சூன், என்பவை.

இதன் சுற்றளவு சுமார் 26 இலட்சம் மைலுக்கு அதிகம்.

குறுக்களவு 8 இலட்சத்து 70 ஆயிரம் மைலுக்கு அதிகம்.

இதன்பரப்பு, பூமியைக் காட்டிலும் 12½ இலட்சம் மடங்கு பெரிது.

இதன் கனம் பூமியைக்காட்டிலும் 13 இலட்சம் மடங்கு அதிகம். இது பூமிக்குச் சுமார் 9 கோடியே 28 இலட்சத்து, 30 ஆயிரம் மைலுக்கு அப்பால் இருக்கிறது.

இதில் பலபுள்ளிகள் உள்ளன. அவை 1000 மைல் ஆழமுள்ளதாய் உள்ளன.

* * *

இவ்வளவும் நாரதர் அருளால் கிடைத்த ஞானமல்ல — பகல் என்றும் இரவென்றும் பாராமல், முடிவுகளைத்துவக்கங்களாக்கித்தொடர்ந்து நடத்திவந்த ஆராய்ச்சியின் விளைவு.

"எல்லாம் திட்டமாக அளந்து சோதித்த விஷயம். புதுச்சாஸ்திரத்தில் எதையும் சும்மா அனுமானத்தில் விடுவதில்லை. ஊகத்தை மறுபடி நிகழ்ச்சிகள்மேல் ஏற்றி, ஒன்றுக்குப் பத்தாக நன்றாய்ச் சோதித்துத்தான் எதையும் சொல்வார்கள். அதுவே பௌதீக சாஸ்திரத்தின் விசேஷம்"—என்று எழுதியிருக்கிறார், ஆச்சாரியார், இன்றைய கவர்னர்ஜெனரல், விஞ்ஞானிகளைப் பற்றி, விசுவரூபதரிசனம் என்னும் ஓர்கட்டுரையில். அதிலேயே அவர் மேலும் கூறுகிறார். "எல்லாம் மிக்க சாதுரியமாக நிர்மாணிக்கப்பட்டயந்திரங்களை அமைத்துக் கொண்டு, கணிதசாஸ்திரத்தின் நுட்பங்களைப் பயன்படுத்தி, மிக்க கவனத்தோடு சோதித்துச் சொல்லப்பட்ட விஷயங்கள்."

ஆச்சாரியார் கூறுகிறார், 'சோதித்துச்சொல்லப்பட்ட விஷயங்கள்' என்று. விஞ்ஞானத்தின் விசேஷம் அதிலேதான் இருக்கிறது. நான் அப்படி நினைக்கிறேன்—இப்படிஇருக்கக்கூடும்—என்ற அளவில் அவர்கள் திருப்தி அடைவதில்லை— யூகங்களை அவர்கள் மக்கள்மீது திணிப்பதில்லை. ரிஷி சிரேஷ்டர்கள் செய்த வேலை அது. காட்சிகளைக் கண்டார்கள்—கற்பனை ஊற்றெடுத்தது— ஏதேதோ வகையான யூகங்கள்செய்தனர். மேற்கொண்டு சோதனைகள் நடத்தவில்லை—அவை வெறும் யூகங்கள் என்று கூறவுமில்லை, யூகங்களை, ஞானவாசகங்களாக்கினர், மக்கள் மீது திணித்தனர்-மதத்தைக் காட்டி மிரட்டினர் சிலர் — சபித்திடுவேன் என்று மிரட்டினர் — பாமரர் அறிவைப்பறிகொடுத்தனர்.

"இப்போது தொலைநோக்கிகளும் நுண்நோக்கிகளும், நிறச்சேதிகுழாய்களும், வைத்துச் சோதித்து, நம்முடைய கண்களைக் காட்டிலும் சூட்சமமாகப் பதிவுசெய்யும்ஒளிப்பதிவுக் கருவிகளையும் அமைத்துக்கொண்டு பிரமாண்ட தொலைகளிலுள்ள பொருள்களின் இரகசியங்களையும் கண்டுவருகிறார்கள், பௌதீக சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள், அவசரப்படுவதில்லை, மயங்குவதில்லை, அகங்காரப்படுவதில்லை, தாம் எண்ணியதே மெய் என்று அவர்களிலே ஒருவரும் பிடிவாதம் செய்வதுமில்லை. கோபமில்லை, துவேஷமில்லை." இதைவிடத்தெளிவாக, விஞ்ஞானியின் இயல்பை யாரும் கூறமுடியாது; இதுவும் ஆச்சாரியார் கூறியதுதான். விஞ்ஞானியின் சிறப்பைக் கூறினர், என்று மட்டுமல்ல, அவர்களின் சிறப்பைக் கூறுவதன்மூலம், ஞானக்கண்ணினரின் குறைதிசயத்தையும் கேலிசெய்கிறார் ஆச்சாரியார் என்று தெரியும் துருவிப்பார்த்தால். ஆச்சாரியாரல்லவா, ஆகவேதான் மறைமுகத்தாக்குதல் நடத்துகிறார், முன்னோர்மீது! விஞ்ஞானிக்கு, என்னென்னகெட்ட இயல்புகள் இல்லை என்று கூறுவதன் மூலம், ஞானக்கண்ணினருக்கு என்னென்ன இயல்புகள் இருந்தன என்பதை ஜாடையாகச் சுட்டிக் காட்டுகிறார்.

அவசரபுத்தியினர்
அகங்காரிகள்

பிடிவாதக்காரர்

கோபசுபாவமுடையவர்

இவ்வண்ணம் இருந்தவர்கள், என்றோ ஓர்நாள், ஏதோ ஓர்வகை அனுமானத்தின்மீது சொன்னதை, என்றென்றும் மாற்றமுடியாதன வென்றும், ஆராய்ச்சிக்கு உட்படவேண்டியவைகளல்லவென்றும், அவைகளைச் சந்தேகிப்பதே பாபம் என்றும், சந்தேகிகளை ஆண்டவனின் சாபம் தீண்டும் என்றும் கூறி அறிவைச்சிறையிலிட்டனர். இங்குநாம், காலையில் எழுந்திருந்து கதிரவனைக் கைகூப்பித்தொழுது கொண்டும், மாலையில், மலைவாயில் சூரியன் வீழ்கிறான் என்று பேசிக்கொண்டும் இருந்துவந்தோம். சூரியபூஜைக்கான சடங்குகளை வகுத்துக்கொண்டிருந்தோம். அதேபோது, அறிஞர்கள் பலர், இந்தக்கோளங்களைப்பற்றிய ஆராய்ச்சியை நடத்திக்கொண்டிருந்தனர். இன்று அறிவுலகம் அவர்கள் கண்டறிந்த உண்மையை ஏற்றுக்கொண்டிருக்கிறது—ஞானக் கண்ணினர் கண்ட சூரியனை அல்ல!!

எந்தவிதமான சடங்கு செய்தால், சூரிய தோஷம் நீங்கும், எவ்வளவு தட்சணை தரலாம், வெள்ளியால் நாகம் செய்து தருவதா, தங்கத்தால் செய்து தருவதா, விசேஷ பலன் எப்படிச் செய்தால் கிடைக்கும் என்று, நம்மவர்கள், சிந்தித்துக்கொண்டு, பூஜா முறைகளை வகுத்துக்கொண்டிருந்த நாட்களில், விஞ்ஞானிகள், சூரியன் ஒரு கோளம், பூமியை விடப் பலப் பல மடங்கு பெரியது, சூரியன் மேருவையும் வலம் வருவதில்லை, மேலே பல பட்டிணங்களுக்கும் சென்று வருவதில்லை பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது, சூரியனைச் சுற்றிவரும் வேறு பலவும் உண்டு, என்றெல்லாம் புது உண்மைகளைக் கண்டுபிடித்தவண்ணம் இருந்தனர். விண்ணை நோக்கிக் கைகூப்பி, விம்மிய குரலில், ஆண்டவனே! நீயே பார், நான் படும் கஷ்டத்தை!—என்று நம்மவர்கள் முறையிட்டுக் கொண்டிருந்த நாட்களில், அறிஞர்கள் தொலை நோக்கிகள் மூலம், விண் வெளியை ஆராய்ச்சி செய்த வண்ணம் இருந்தனர். சந்திரன், இரவல் பிழைப்புக்காரன்—சொந்த ஒளி கிடையாது — சூரியனுடைய ஒளியால்தான் பிரகாசிக்கிறான்

(10-ம்பக்கம் பார்க்க)

சீனா சிவப்பாகிறது!

16-ம் பக்கத் தொடர்ச்சி

யில் வெள்ளையர் வீட்டில் வேலை செய்துவந்த சீனத் தொழிலாளர்களும், ஹாங்காங் தொழிற்சாலைகளில வேலை செய்து வந்த தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்துவிட்டனர். இந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்கப் பல முறைகளையும் கையாண்டனர். தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்; தொழிற் சங்கங்கள் கலைக்கப்பட்டன; கூட்டங்கள் தடுக்கப்பட்டன. இதன் விளைவாக, சீனத் தொழிலாளர்கள் அனைவரும் ஹாங்காங் நகரைவிட்டு வெளியேறி விட்டனர். நகரம் துண்டிக்கப்பட்டு விட்டது. பதினைந்து மாதங்கள் இந்த ஒத்துழையாமை நீடித்தது. பிரிட்டிஷ் வியாபாரம் பாதியாகப் போய்விட்டது. ஏகாதிபத்தியத்தின் பெருமையும் சக்தியும், ஜனசக்தியால் பரிகாசத்திற்குள்ளாக்கப்பட்டு விட்டது. சீனாவின் விடுதலைக் கிளர்ச்சியில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் முக்கிய இடம் பெற்றுவிட்ட சம்பவமாகும் இது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த வாம்புவா இராணுவ கலாசாலையின் தலைவராக சியாங் கேய் ஷேக் வேலை பார்த்து வந்தார். காண்டன் சர்க்காரைக் கைப்பற்றச் சிலர் சதி செய்வதாக வதந்தி கிளம்பிற்று. இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, கலாசாலை துருப்புகளின் உதவியால், காண்டன் நகரைக் கைப்பற்றிவிட்டார் சியாங். தொழிலாளர் பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்பையும் இதற்குப் பெற்றார்.

தனது அதிகாரத்தை பலப்படுத்திக் கொள்வதற்காக, முதல் முதலாக அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை, தனக்கு வெற்றி தேடித் தந்த தொழிலாளர் பாதுகாப்புப் படையைக் கலைத்ததுதான். 1926 மார்ச்சு 20-ந் தேதி அதிகாரத்திற்கு வந்த அரை நாளுக்குள்ளாகவே, எல்லாவித அடக்கு முறைகளையும் கையாண்டு எதிர்ப்புகளை அடக்கிவிட்டார். தொழில் ஸ்தாபனங்களைச் சோதனை இட்டார். இருந்தாலும் இவருக்கு ஆதரவு நாட்டில் இருந்தது.

எல்லையைப் பெரிதாக்கவும், அதிகார்த்தைப் பெருக்கிக் கொள்ளவும், தாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் சிறிதளவாவது, மக்கள் வாழ்க்கை வளத்திற்கு எடுத்துக்கொண்டிருந்தால், சியாங் ஆட்சிக்கு, இன்று ஏற்பட்டிருக்கும் நெருக்கடி இன்னும் சில ஆண்டு கழித்துத்தான் ஏற்பட்டிருக்கும். எந்த, ஏகாதிபத்யப்பிடியாலும், சீன முதலாளிகளின் சுரண்டல் தன்மையாலும், இராணுவஇலைப் பிரபுக்களின் கொள்ளையாலும், சீன மக்கள் வாழ்விழந்து, வெறும் நடைப்பிணங்களாக வாழ்ந்து வந்தார்களோ, அதே நிலையைப் பாதுகாத்துப் பாராமரிக்கவும், அதற்கு ஏற்படும் எதிர்ப்புகளை கொடும் நடவடிக்கையால் அழிக்கவும் முற்பட்டார் சியாங். இராணுவ முக்கியஸ்தர்களின் கொடுங்கோன்மைக்கும், மற்றவர் சுரண்டலுக்கும் தாம் முன்னோடும் பிள்ளையாக இருந்து, அமெரிக்க உதவியால் சர்வாதிகாரம் செய்துவந்தார் சியாங். அதற்கு இன்று ஆட்டம் கண்டிருக்கிறது. இன்னும் சில காலம் சென்று சிகப்பாக வேண்டிய சீனா, சியாங்கின் அதிகார வெறியால், ஒழுங்கற்ற கொடுங்கோலாட்சியால், அதிகார பீடத்தில் அவர் அமர்ந்துகொண்டிருக்கும் அதே நேரத்தில், நிமிஷத்திற்கு நிமிஷம் வேகமாகச் சிகப்பாகி வருவதைக் காண்கிறார். அதிகாரத்திற்கு வந்தபோது இருந்த வெற்றிக் களிப்பு, கூட்டுத் தோழர்களைத் தொலைத்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சி, தொழிலாளர் இரத்தம் தம் கைகளைக் கறைபடுத்தியபோது தோன்றிய சந்தோஷம், இன்று நாடு சிகப்பாகும்போது இருக்காதுதான். என் செய்வது? சீனா சிகப்பாகிறது!

1926-ல், சியாங் பதவி பெற்ற அன்று, பதுங்கிக் கிடந்த ஆனால் புகைந்துக்கொண்டிருந்த, மக்கள் சக்தி இன்று மீண்டும், வெற்றிப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருக்கிறது. அன்று எழுந்த மக்கள் எழுச்சியை, கருத்தைக் கவரும் கருத்துகள் — சிந்தனையை மயக்கும் சொல்லலங்காரங்கள் — ஆகியவற்றால் அடக்கி ஒடுக்கிவிட்டதாக, நம்பி நாள் கடத்திவந்த சியாங்கின் முடிவு நெருங்கிவிட்டதை, அதிகார பீடத்தில் உள்ள அனைவரும் ஓர் எச்சரிக்கையாகக் கொள்வது நல்லது.

திராவிட நாடு

காஞ்சி] 21—11—48 [ஞாயிறு

அறப் போர்—பலன்,பல

கதிரவன் காய்கிறான்! அவர்கள் ஓய்வெடுப்பதில்லை! கார் மிரட்டுகிறது, அவர்கள், கடமையைச்செய்யாமலிருப்பதில்லை! அவரவர் தத்தமது சொந்த நலனுக்கான காரியத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளை—இவர்களோ, நாட்டின்எதிர்காலத்தை நோக்கமாகக்கொண்டு நற்பணியைத் தளராமல் செய்துவருகின்றனர். அதோ ஒருவர் அவசர அவசரமாகச் செல்கிறார் தமது அலுவலகம் நோக்கி—சென்றால்தான் குடும்பம் செம்மையுற நடத்த முடியும் என்ற எண்ணம் அவருக்குச் சவுக்கு! இதோ இன்னொருவர், சற்று ஏளனமாகப் பார்க்கிறார்-இதுகளுக்கு ஏன் இந்தத் தொல்லை—என்று பேசுகிறது அவருடைய பார்வை! ஏளனம் கண்டு, அவர்கள் தமது கடமையைக் கைவிடவில்லை. எந்த நேரத்தில், சென்னைநகரில் மக்கள், பல்வேறு பணிபுரியக் கிளம்புகின்றனரோ, எப்பணி புரிந்தேனும் குடும்பத்தை நடத்தவேண்டுமே என்ற கவலையுடன், தொழில்நிலையம் நோக்கியோ, துரைத்தன அலுவலகம் நோக்கியோ, நாணயமான பணி புரியவோ, நாட்டு மக்களைக் கெடுக்கும் காரியம் செய்யவோ, இலாப வேட்டைக்கோ, வாழ்க்கை எனும் மூட்டையைச் சுமக்கவேண்டுமே என்ற வாட்டத்துடனோ, ஏதோ ஓர் வகையான வேலையில் ஈடுபடப் பலரும் செல்கின்றனரோ, அதே நேரத்தில், சொந்த நலனை மறந்து, நாட்டுமொழியைக் காக்க, வீட்டையும் துறந்து, பணிபுரிகின்றனர், அறப்போர் வீரர்கள்.

இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! எனும், அவர்களின் குரலொலி கேட்டவண்ணம் இருக்கிறது பள்ளிவாயலில்—ஒவ்வோர் நாளும்-ஓய்வின்றி முழக்கமிடுகின்றனர்—மாணவச் சிறாரின் மனம் உருகும் வகையில், காண்போரில் கண்ணியவான்களின் கண்களெல்லாம் கேள்விக் குறிகளாக மாறும் விதத்தில்! ஆசிரியர்களும் மாணவர்களும், வகுப்புகளில் சந்திக்கும்போது, மாணவரின் பெயரை, முத்துசாமி! முருகானந்தா! சின்னசாமி! சீனுவாசா!-என்று அழைக்கும்போதும், மாணவர்கள் அதற்குப் பதில் கூறும் போதும், ஆசிரியர் மாணவர் ஆகிய இருவரின்செவிகளிலும் அறப்போர் முழக்கத்தின் எதிரொலிதான் கேட்கிறது—எங்கிருந்தோ கிளம்பிவரும் ஏக்கக் குரலொலி கேட்கிறது, இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று அறப்போர் வீரர்கள் முழக்கமிடும் காட்சியும் மனக்கண்முன் தோன்றுகிறது. பாடம் படித்திட ஏடுகளைப் பிரித்ததும், மாணவர்களின் கண்களிலே, அசோகர் அக்பர் படங்களோ, ராம கிருஷ்ணன் படங்களோ, புத்தகத்திலே பொறித்திருந்த போதிலும், அந்த உருவங்களல்ல, கடமைக்காக, வாயலில்நின்று, கனிவுடன் தம்மை நோக்கி, "தம்பி! இந்தி படிக்காதே!" என்றுகூறிய, அறப்போர் வீரர்களின் உருவங்களே, தெரிகின்றன! அவர்கள், பள்ளி மாணவர்களின் நினைப்பிலிருந்து நீங்கா நிலைபெற்று வருகின்றனர்—ஒவ்வோர் நாளும் ஒருமணிநேரம், உள்ளன்புடன் அவர்கள் ஆற்றும் தொண்டின் மூலம். இது மட்டுமல்ல, இந்தி படிக்கும் மாணவர்களின் தொகையும் மறியல் நடக்கும் பள்ளியில் குறைந்துகொண்டே வருகிறது

ஒரு நாளைக்குப் போலீஸ் நடவடிக்கை பரபரப்பாக இருக்கும், மற்றோர் நாள் மந்த நிலைபெறும், ஓர் நாள் பெருங்கூட்டம் சேர்ந்து உடன் முழக்கமிடும், மற்றோர் நாள், கூட்டம் இராது, ஓர்நாள் கடும் வெயில் இருக்கும், இன்னோர் நாள் மழைபொழியும், எந்த நிலை இருப்பினும், அறப்போர் வீரர்கள் தமது கடமையினின்றும் வழுவாமல், பள்ளிவாயலில் நின்று, இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று முழக்கமிட்ட வண்ணம் உள்ளனர்.

திடீரென்று ஓர்நாள், நீங்கள் ஊர்வலம் சென்றீர்கள்—கைது செய்கிறோம்! — என்று போலீஸ் கூறுகிறது. வழக்கமான புன்னகை, மலருகிறது, முழக்கத்திலோர் புதுச் சக்தியும் வளருகிறது—போலீசுக்கு வேலை அதிகரிக்கிறது—தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர் என்ற செய்தி நகரெங்கும் பரவுகிறது. பிறகு, ஏனோ, மீண்டும் ஓர் திடீர் மாறுதல் காணப்படுகிறது, போலீஸ் போக்கில் உயர்தர அதிகாரிகள் ஏதோ பேசிக்கொள்கிறார்கள்—கூடிக்கூடி—பிறகு, கைதுசெய்து அழைத்துச்சென்ற தொண்டர்களை,விடுதலை செய்கின்றனர்.

கைது செய்யப்பட்ட அன்று, அறப்போர் வீரர்கள், எவ்வண்ணம் சென்றனரோ, என்ன முழக்கமிட்டனரோ, எப்பக்கம் சென்றனரோ, அதே முறையில், மறுநாளும், தொடர்ந்தும் நடைபெறுகிறது, ஆனால், அன்று கைது செய்த போலீஸ், பிறகு வாளா இருந்துவிட்டது, என்ன செய்வதென்று புரியாத நிலைபோலும். ஆனால், என்ன நிலை இருப்பினும், என்ன போக்கினைச் சர்க்கார் மேற்கொள்வதாயினும், அறப்போரிலே மட்டும், மாற்றம் ஏதும் இல்லை—அந்த முழக்கம் கேட்டவண்ணமிருக்கிறது.

பலன் என்ன காண்கின்றனர்! வெற்றி அவர்களை நாடி வரக்காணோமே!—என்று பலர் எண்ணுவர்—இயற்கை! சட்டை செய்யாதது போல இருந்து விடுவோம் அவர்களின் ஆர்வம் சருகென உலர்ந்து தானாக உதிர்ந்து போய்விடும்,என்று ஆளவந்தார்கள் எண்ணுகின்றனர். நண்பர்களின் சந்தேகம், நாடாள்வோரின் சாகசம், ஏமாளிகளின் அக்கரையற்ற தன்மை, எத்தர்களின் எக்களிப்பு, எதனையும் பொருட்படுத்தாது, அறப்போர் வீரர்கள் தமது கடமையைச்செய்து வருகின்றனர், இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று தமிழகத்தின் முழக்கத்தைப்பரப்பியவண்ணம் உள்ளனர். ஆம்! அவர்களின் அறப்போர் முழக்கம் கேட்டவண்ணமே இருக்கும்—ஆட்சியாளர்கள் அவர்களைச் சிறையில் தள்ளிவிட்டால், அந்தக் கடமையை மேற்கொண்டு பணிபுரிய, வேறு அறப்போர் வீரர்கள் முன்வருவர்! தொடர்ந்து நடந்தபடி இருக்கும். துவண்டுவிடும் என்று ஆளவந்தார்கள் நினைப்பது, தவறு, பலன்காணோமே என்று நண்பர்கள் வாடுவதும் கூடாது, ஏனெனில் பலன், பலவகையிலே கிடைத்தபடி இருக்கத்தான் செய்கிறது.

இங்குமட்டுமல்ல, எங்கும், இந்தி எதிர்ப்புப்போர்நடைபெற்றுவருவது பற்றிய, பேச்சு, ஆளவந்தார்களின் வட்டாரத்திலே பேசப்பட்டு வருகிறது—அத்துடன், தொடர்பான பேச்சாக, இந்திமொழி பற்றிய பிரச்னை பேசப்பட்டு வருகிறது—அந்தப் பேச்சின் விளைவுகளெல்லாம், நமதுகுறிக்

கோளுக்கு அரண்தருவனவாகின்றன.

'தென்னாட்டு உறுப்பினர்கள்கூடி' டில்லியில் பேசி, முடிவு செய்தனர், மொழிப்பிரச்னை பற்றி. என்ன அந்த முடிவு? இந்தியைக் கட்டாயப்படுத்தியே ஆகவேண்டும். உடனடியாக இந்திமொழிக்கே ஆட்சி மன்றத்திலே உயர்வு தந்தாக வேண்டும் - என்றா? இல்லை! அவர்களுக்கு, அந்தத் துணிவு பிறக்கவில்லை—பிறக்க முடியாது, அவர்கள் அறிவர், அறப்போர் நடைபெறுவதை! எனவே, மெள்ள மெள்ள, படிப்படியாக, நாளாவட்டத்தில், ஒரு பதினைந்து வருஷ கால அவகாசம் கொடுத்து—இப்படித்தான் இந்தியைப் புகுத்த முடியும், என்று பேசுகிறார்கள். அதிகார பலத்தைக் கொண்டு, அன்னிய மொழியைத் திணித்துவிட முடியாது என்பதை, ஆட்சியாளர்களுக்கு, நாம் நடத்திவரும் அறப்போர் உணர்த்திவிட்டது. கட்டாயமில்லை— கட்டாயப்படுத்தவில்லை —இஷ்டபாடமாகவே வைத்திருக்கிறோம்—என்று, செல்லுமிடமெல்லாம், அமைச்சர்கள் கத்துகிறார்கள். ஆராய்ந்து பார்த்தால், அலசிப் பார்த்தால் அவர்கள் கூறுவது பொருந்தா உரை, என்பது விளங்கிவிடும்; என்றபோதிலும், கட்டாய பாடமாக இந்தியைப்புகுத்தவில்லை என்று ஒப்புக்காகவேனும், அமைச்சர்கள், ஓலமிடவேண்டிய நிலை இருப்பதற்குக் காரணம், தொடர்ந்து நடந்து வரும் அறப்போர்தான்! அமைச்சர்கள் இதுபோலப் பேசும் போது, இந்தி கட்டாயபாடமல்ல, இஷ்டபாடந்தான் என்று வாதாடும் போது, அவர்களின் மனக்கண்முன் தோன்றுவது என்ன காட்சி? பள்ளி முன் நிற்கும் அறப்போர் வீரர்கள், பணிவுடன், மாணவர்களை இந்தி படிக்காதீர்! என்று கேட்டுக் கொள்ளும் காட்சிதானே!!

அமைச்சர்கள், பிடிவாதத்தை அல்ல, இன்று நம்பிக்கொண்டிருப்பது, பலத்தையுமல்ல; அவர்கள் பசப்புப் பேச்சை மட்டுமே நம்பிக்கொண்டிருக்கிறார்கள் — இந்தி கட்டாய பாடமல்ல என்று பன்னிப் பன்னிப் பசப்பிப் பேசினால், மக்களின் மனதை மயக்கிவிடலாம், என்பதே அவர்கள் நோக்கம். அறப்போரைத் தமது பலத்தால் முறியடிக்க முடியாது, என்பதை உணர்ந்து கொண்டனர் இந்த அமைச்சர்கள். எனவேதான் பசப்புப் பேச்சு பலிக்கிறதா என்று பரீட்சை பார்க்கின்றனர். அறப்போர் வீரர்களின் ஆற்றலை அமைச்சர்கள் அறிந்து கொண்டனர் — எனவேதான், அமைச்சர்களின் போர் முறையிலே, குறிப்பிடத்தக்க இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

அறப்போர் வீரர்களுக்கு, இந்த நிலை, மேலும் உற்சாகத்தைத்தான் ஊட்டுகிறது! அவர்களின் ஆர்வத்தை மேலும் வளமாக்க, நாள்தோறும், இங்கிருந்து மட்டுமல்ல, துணைக் கண்டத்தின் பல பாகங்களிலுமிருந்து, இந்தி மொழிக்கு இடியும் ஏளனமும் கிளம்பியபடி இருக்கிறது!

இந்தி மொழி ஏகாதிபத்யமா? ஏற்கோம்!—என்று அரசியல் நிர்ணய சபையிலே டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் முழக்கமிடுகிறார்—அறப்போர் வீரர்களின் தூதுவர்போல!!

ஆங்கில மொழிச் சொல்லை நீக்கிவிட்டு, பிரதேஷ் எனும் இந்திச் சொல்லைப் புகுத்தவேண்டும், என்று அரசியல் நிர்ணய சபையிலே ஒருவர் கூறுகிறார், நேரு, "செச்சே! இதென்ன பித்தம்! பிரதேஷ் என்றால், யாருக்குப் புரியும்? நிலையான பொருளே கிடையாதே அந்தச் சொல்லுக்கு," என்று பேசுகிறார், "பிரதேஷ்," தோற்று விடுகிறது!

இந்தி மொழி பரப்பும் கழகத்தைச் சார்ந்த, தோழர் சத்யநாராயணா என்பவர்,

"மாகாண நலத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும், மாகாண மொழிகளின் வளர்ச்சிக்கு மாறாகவும் திணிக்கப்பெறும் பொதுமொழி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது தான். கட்டாயமின்றி, இயல்பாக, பிறர் உரிமையைக் கெடுக்காமல், செய்யப்படும் காரியந்தான் வெற்றி பயக்கும்." என்று கூறுகிறார்.

காமராஜர்கூட,

"சென்னை மந்திரிசபை முக்கிய திட்டங்களை அமுல் நடத்தப்புகுவதில் மக்கள் எண்ணங்களைக் கவனிப்பதேயில்லை. முன்பு இந்தியைக் கட்டாய பாடமாக்கிய பொழுது 1800 பேர் சிறைசென்றதை நினைத்துப் பார்க்காமல் கல்வி மந்திரி வெளியிட்ட ஒரு அறிக்கை வேண்டாத ஒரு நிலைமையை உண்டாக்கிவிட்டுள்ளது. இந்தியைக் கட்டாயப்படுத்த வேண்டாமென்பது என் சொந்த அபிப்பிராயம்"

என்று கூறுகிறார். இவ்வண்ணம், இந்தி மொழிக்கு இடியும் ஏளனமும், எங்கும் கிளம்பியபடி இருப்பது, ஏன்! அறப்போர் தான் அதற்குக் காரணம்! இந்தி மொழி ஏகாதிபத்யம், முளையிலேயே அழிக்கப்பட்டு வருகிறது. அறப்போர் வீரர்காள்! உங்கள் முழக்கம், எங்கும் எதிரொலிக்கிறது! சென்னையில் எங்கோ ஓர்மூலையில் கவனிப்பாரற்ற நிலையில், யாரோ சிலர், போடும் கூச்சல் என்று இதனைத் துச்சமென்று கருதுவதாகப்பாவனை செய்தபோதிலும், யாருடன் உரையாடிக்கொண்டிருந்தாலும், டில்லியில் உலவினாலும் தமது வீட்டுக் கொல்லையில் உலவினாலும், அறப்போர் வீரர்காள்! நீங்கள்தான், அவர்களின் அகக்கண்முன் தெரிகிறீர்கள்—ஒவ்வோர் நாளும், இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று நீங்கள் இடும் முழக்கம், புகாத இடமில்லை, கேளாத நாளில்லை! அமைச்சர்களின் செவிகளில், இந்த முழக்கம் ஒலித்தவண்ணம் இருக்கிறது! ஆகவேதான், அவர்கள் எங்குசென்றாலும், எதைப் பேசச் சென்றாலும், உங்களைப்பற்றியே பேசநேரிடுகிறது! அறப்போர் வீரர்களே! நீங்கள் அமைச்சர்களை மறந்தாலும், அமைச்சர்கள் உங்களை மறக்கமுடியாது — அவ்வளவு வெற்றிகரமாக, அவர்களின் சிந்தையில் இடம் பெற்றுவிட்டீர்கள்! அறப்போர் தொடர்ந்து நடைபெறட்டும்! அமைச்சர்களின் திட்டம் மாறியே தீரும், என்ற உறுதியுடன், பணிபுரியும் உங்கள் முயற்சி வீண்போகாது! வீண்போகாது!!

*

"திருவிடம்"

பல அசந்தர்ப்பங்களால், 1—12—48 முதல், சில காலம்வரை மாதவெளியீடாகப் பிரசுரிக்கப்படும் என்பதையும் வாசகர்களும், பிற ஆதரவாளர்களும் பொறுத்தருள வேண்டும் என்பதாகவும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தொகுப்பாளன்:—

C. B. தண்டாயுதபாணி
திருவிடம், காஞ்சிபுரம்.

விஞ்ஞானக்கண்

7-ம் பக்கத் தொடர்ச்சி

என்று கண்டுபிடித்தனர். சந்திரனை நாம் நமது புராணத்தின்படி தாராவுடன் கள்ளக் காதல் நடாத்தியவனாகச் சித்தரித்து, அத்துடன் திருப்தி அடைந்தோம், ஆனால் அறிஞர்கள் சந்திர மண்டலத்தைப் பற்றி விரிவான ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள்! பல புது உண்மைகளை—ஆச்சரியம் தரும் உண்மைகள் மட்டுமல்ல, பலன் தரும் உண்மைகளைக் கண்டறிந்தனர். நாம் சூரியதேவன், சந்திரதேவன், பூமாதேவி, சமுத்திரராஜன், என்று கதைகள் படித்து, அவைகளை நம்பி, அதற்கேற்ப நமது வழிபாட்டு முறைகளை வகுத்துக்கொண்டிருந்த நாட்களிலே, மற்ற நாட்டு 'மேதைகள்' தமக்குத் தெரிந்த அளவு உண்மை போதாது என்று, மேலும் மேலும் உண்மையைக் காண உழைத்தனர். ஞானக் கண்ணினர், விண் மீன்களைக் காட்டி, அதோ அருந்ததி! பின்னும் அவளுடைய மேலான கதையைக் கேளீர், என்று கதை கூறினர்—நட்சத்திரங்கள் பலவற்றுக்கும் நவரசம் பொருந்திய கதைகளைக் கூறினர்—அந்த நாட்களில்—ஆனால் அறிஞர்கள் இந்தக் கதைகளைத் தாண்டிச் சென்று, புது உண்மைகளைக் கண்டறிந்தனர்—விண்ணிலே, தெரிவது எல்லாம் நட்சத்திரங்கள் அல்ல—அவைகளிலே, நட்சத்திரங்களும் உண்டு, கிரஹங்களும் உண்டு, நட்சத்திரம் மின்னும், கிரஹங்கள் ஒளியுடன் விளங்கும், இரண்டும் வெவ்வேறு வகையின, நட்சத்திரங்கள், சொந்தத்திலேயே ஒளிவிடுவன, கிரஹங்கள், சூரிய ஒளியைப் பெற்றுப் பிரகாசிப்பன, கிரஹங்கள் உள்ள இடத்திலிருந்து பலப்பல ஆயிரம் மைல்களுக்கு மேலே, நட்சத்திரங்கள் உள்ளன என்று கண்டறிந்து கணக்கிட்டுக் கூறினர்.

சூரிய கிரஹணம், சந்திர கிரஹணம் என்பவைகளுக்கு நாம், ராகு கேது கதையைக் கூறி, பாம்புருக் கொண்ட தீயவர் சூரியனைச் சில சமயமும், சந்திரனைச் சில சமயமும், பிடித்து விழுங்க முயற்சிக்கும் சம்பவந்தான், கிரஹணம் என்றும் கிரஹண தோஷம் போக, இன்ன விதமான பூஜைகள் செய்யவேண்டுமென்றும் கதை பேசிக்கொண்டு, வாழ்க்கையை அதற்கேற்றபடி அமைத்துக்கொண்டு, கிரஹண காலத்தில், தர்ப்பையைக் கிள்ளிப் பாண்டங்களில் போட்டுத் தோஷத்தைப் போக்குவதும், குளத்தங்கரையில் உட்கார்ந்து, முணுமுணுக்கும் ஐயருக்குத் தட்சணை தந்தும் காலந் தள்ளிவந்த நாட்களில், விஞ்ஞானிகள் தொலைநோக்கி, நுண்நோக்கி, பெரிதாக்கி, எனும் கருவிகளைக் கண்டுபிடித்து, அவைகளின் உதவியைக் கொண்டு, வான நூலையும் கணித நூலையும் தொடர்பாக்கி, கிரஹணம் ஏற்படும் காரணத்தை விளக்கிக்காட்டி அதன் தொடர்பாகப் பலபுது உண்மைகளைக் கூறினர். நம் வீட்டுச் சிறாரும், இப்போது, பாம்பு விழுங்கும் கதையை அல்ல, படிப்பது—விஞ்ஞானி கூறிடும் உண்மையைத்தான் படிக்கிறான். ரமணரின் திருவடி தொழுதாலும், அரவிந்தர் அடி பணிந்தாலும், ஆடியில் காவடி எடுத்தாலும், மௌனவிரதமிருந்தாலும், எவ்வளவு வைதீகராக இருந்தாலும், உலகக் கல்வித்திட்டத்தில் கூட, அல்ல, நம்நாட்டுக் கல்வித்திட்டத்திலேகூட கிரஹணத்துக்கு, ராகு கேது கதையை, விளக்கமாக்கி, உலக முழுவதும் வேறுவிதமாகக் கருதினாலும், நாம் அதனை ஏற்கோம், நமது ஞானிகள் கண்டறிந்து கூறிய உண்மையையே நாம் நம்புவோம், கிரஹணம் ஏற்படுவது, தேவலோகத் தகராரின் விளைவாக ஏற்பட்ட ராகு கேது சம்பவத்தால் தான், என்று மாற்றி எழுத முடியாது! மாநிலம் நகைக்கும்!!

புது உண்மைகளை மறுத்துப்பேச முடியாத நிலையும், அந்தப்புது உண்மைகளின் விளைவுகளால் கிடைக்கும் பலன்களை விட்டுவிட மனமில்லாத நிலையும், அதேபோது, பழைய பாசத்தை நீக்கிவிடத் தைரியமற்ற நிலையும் ஒன்று சேர்ந்து நமதுநாட்டு மக்களில், விஷயம் தெரிந்தவர்களைக் கூட விசித்திரமனிதர்களாக்குகிறது! கிரஹணத்துக்கு, விடுமுறையும் விடுகிறது நமது சர்க்கார்—பழைய ஐதீகத்தின்படி—வானமண்டல ஆராய்ச்சி நிலயத்துக்குப் பணமும் செலவிடுகிறது, புது உண்மையை உதறித் தள்ள முடியாததால்.

கிரஹதோஷம் போக, எள்ளு எத்தனைபடி தேவை, கொள்ளு எவ்வளவு வேண்டும், பாக்கு எத்தனை, வெற்றிலை எத்தனை, பணம் எவ்வளவு, என்ற கணக்கெடுத்துக் கொண்டு, வாழ்க்கையை நம்மவர்கள் அமைத்துக்கொண்டிருந்த நாட்களில், அங்கு அறிஞர்கள் நட்சத்திரங்களின் எண்ணிக்கையைக் கணித்துக்கொண்டிருந்தனர். கண்ணாலே காணக்கூடியது சுமார் ஆறாயிரம். தொலைநோக்கி மூலம் கண்டறியக் கூடியவை சுமார் ஐந்து இலட்சம் நட்சத்திரங்கள்! இவைகளைக் கணக்கெடுத்து மட்டுமல்ல, படமெடுத்தும் காட்டியிருக்கிறார்கள். இப்போது கைவசம் உள்ள தொலைநோக்கிக் கருவியைவிட, மேலான முறையிலே தயாரித்தால், மேலும் பல இலட்சம் நட்சத்திரங்களைக் காணக்கூடும் என்றும் எண்ணுகிறார்கள்—அதற்கான ஆராய்ச்சியும் நடத்துகிறார்கள்.

பூமியின் வடிவம் தட்டை, அதைத் தாங்கும் ஆதிசேஷனுக்குத் தலை ஆயிரம், பூமி ஒரு தேவி, பொறுமைக்குணமே அவள் பூஷணம், என்று கதை பேசுவதுடன், நமது அறிவுத்தாகம் அடங்கிவிட்டது, அங்கு அறிஞர்கள், இது போலக்கதைகள் பேசிக்களிப்படைந்துவிடவில்லை—ஆராய்ச்சி நடத்தினர்—விஞ்ஞானியின் கண்களிலே, நமது நாட்டு ஞானக்கண்ணினருக்குத் தெரிந்த ஆயிரம்தலை நாகமும் தெரியவில்லை. அதனால் தாங்கப்படும் தேவியும் தெரியவில்லை, மாறாக, சதா தன்னைத்தானே சுற்றிக்கொண்டும், சூரியனைச் சுற்றிக்கொண்டும் வருகிற பூமி தான் தெரிந்தது! உலகம் இதைத்தான்—உண்மை என்று ஏற்றுக்கொண்டதே தவிர—நாம் உட்பட—பூமிக்கு இலட்சணம் கற்பித்த தமது முன்னோர்களின் ஜடைமுடியையும் காவி கமண்டலத்தையும், யாகயோகத்தையும் விளக்கி விளக்கிக் கூறினாலும், "பூர்வீக உண்மையை" ஞானக்கண்ணினர் கூறின உண்மையை ஏற்றுக்கொள்ளவில்லை! நம்மிலே, அகோர வைதிகருக்கும் அந்தத் துணிவு பிறக்காது!

சூரியனுக்கும் நமக்கும் உள்ள தொலைவைத் தீர்மானித்திருக்கிறார்கள். பூமி, மணி ஒன்றுக்கு எழுபத்திரண்டாயிரம் மைல் வேகத்தில் சுற்றி வருகிறது என்று கணக்கிட்டுக் கூறுகிறார்கள். எடை, இயல்பு, வேகம், செல்லும் பாதை, எல்லாவற்றையும் கணக்கிட்டுக் கூறியுள்ளனர். ஞானக் கண்ணினர் கண்டறிந்ததாகக் கூறப்படும் உண்மைகள், வெறும் கற்பனை, அல்லது யூகம், அல்லது தத்து

வார்த்தம், என்றாகிவிட்டன. உலக அறிவு மன்றத்தில் விஞ்ஞானக் கண்ணினர் கண்டறிந்து கூறிடும் உண்மைகளே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் புது உண்மைகளை அறிந்திருப்பதுதான், கல்வி கற்றதற்கு அடையாளமென்றும், இந்த உண்மைகளை ஊருக்கு உரைப்பதுதான் உண்மை உபதேசம் என்றும், இந்த உண்மைகளுக்கும் அப்பால் இருக்கும் உண்மைகளை நாடிச் செல்வதுதான் அறிஞர் கடன் என்றும், அங்கெல்லாம் கருதப்படுகிறது. இங்கு, பழைய ஐதீகத்தை நம்புவதும், அதற்கேற்றபடி காரியங்கள் செய்வதும் விவேகியின் செயலாக மட்டுமல்ல, பக்தனின் இலட்சணமாகக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

* * *

உலகிற்கு, இந்த இரு செய்திகளைத் தருகிறோம் நாம்.

1. சூரிய கிரஹணத்துக்காக இன்று சர்க்கார் விடுமுறை தருகிறது. சமுத்திர ஸ்நானம் செய்வதற்கு, பந்தோபஸ்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

2. புதிதாகச் சில நாட்களாகத் தெரியும் வால்நட்சத்திரத்தை, கோடைக்கானலில் உள்ள, சர்க்கார் வானிலை ஆராய்ச்சி நிலையத்தினர், ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

இந்த இரு செய்திகளும் ஒருசேர உலகத்தால்—அறிவு மன்றத்தால் கவனிக்கப்படும்போது, உண்மையிலேயே நமது நாட்டவரின் மனநிலையைத்தானே, அவர்கள் ஆராயத் தொடங்குவர்! கொடைக்கானலிலே வானிலை ஆராய்ச்சி நிலையம்! கிரஹண தோஷம் போக சமுத்திர ஸ்நானம், அதற்கு சர்க்காரின் முன்னேற்பாடு! இந்த விசித்திரமான போக்கு, ஏன் இவர்களுக்கு இருக்கிறது என்றுதானே, ஆராயத் தோன்றும், எவருக்கும்! 'விசித்திரசித்தர்கள்' உள்ள நம்மவர்கள், இன்று அனுபவிப்பதெல்லாம் விஞ்ஞானக் கண்ணினர் கண்டறிந்த உண்மைகளால் கிடைத்த பலன்களே! ஆனால் அதேபோது நம்புவதும் பூஜிப்பதும் ஞானக் கண்ணினர் கண்டதாகக் கூறப்பட்டு இன்று அறிவு மன்றம் அணுக முடியாதிருக்கும் சிலபல யூகங்களின் மீது கட்டப்பட்ட மூட நம்பிக்கைகளே!! இவ்விதமான விசித்திர சித்தர்களாக நாம் இருக்கும் மட்டும் நாம் அறிவுலகில் இடம்பெற முடியாது.

விளம்பரச்சாவடி

டில்லி, ஒரு விளம்பரச்சாவடியாகி விட்டது!

இங்கு, வெளிநாட்டுத் தூதுவர்களும், வியாபார மோப்பம் பிடித்துக் கொண்டு வந்து சேருபவர்களும், குவிந்த வண்ணம் உள்ளனர்.

அவர்களை வரவேற்று, இந்திய சர்க்கார் அடிக்கடி விருந்துபசாரம் நடத்துவதும், அவர்கள், இந்திய சர்க்காரின் பிரதிநிதிகளை வரவேற்று உபசரிப்பதும், 'நித்ய நிகழ்ச்சி'யாகி விட்டது.

இனிய கானம்! நேர்த்தியான நடனம்! உல்லாசம்! உரசல்! உபசாரம்!—குறைவின்றி நடக்கிறது.

தீபாவளி விழாவுக்கு, ரஷியத்தூதுவர் அழைக்கப்படுகிறார்—அதுபோலவே சோவியத் புரட்சி விழாவுக்கு, கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் அழைக்கப்படுகிறார். இந்திய ஓவியக் காட்சியை வெளிநாட்டுத் தூதுவர்கள் கண்டு களிக்கிறார்கள்-வெளிநாட்டுக்காரரிடம் விற்பனைக்குத் தயாராகவுள்ள பொருள்களின் பட்டியலை, அவர்கள் இந்திய சர்க்கார் அதிகாரிகளிடம் காட்டுகிறார்கள்.

ஒவ்வொரு நாட்டுடனும், இந்தியா, பழங் காலத்திலிருந்தே ஏதோ ஓர் வகையிலே, பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தது என்பதைப் பன்னிப் பன்னிக் கூறி, இனியும் இந்தியா அந்த நாடுகளுடன், நேசபாசமாக இருக்கப்போகிறது, என்று பேசப்பட்டு வருகிறது. அதிகமான செலவில் நடைபெறும், இந்த விருந்து வைபவங்கள், தொடர்புக்கான தோட்டக் கச்சேரிகள், உபசாரப் பேச்சுகள், யாவும், ஒரே ஒரு முக்கியமான நோக்கத்தைக் கொண்டே நடைபெறுகின்றன! விளம்பரம்! விளம்பரம்! இதுதான் நோக்கம்!

சீமையிலே, ஒன்பது மோட்டார்களை வைத்துக்கொண்டு ஒரு தூதர் ஒய்யார வாழ்வு நடாத்துவதும், சோவியத்தில், சொர்ணமயமான உடையும் உடைமைகளையும் வைத்துக்கொண்டு சொகுசாக மற்றோர் தூதர் வாழ்வு நடத்துவதும், அபிசீனியாவுக்கு நல்லெண்ணக் கோஷ்டி அனுப்புவதும், அமெரிக்காவில் பிரச்சார சபை அமைப்பதும், பிரேசிலுக்குப் அர்ஜெண்டினாவுக்கும்கூட தூதவர்கள் செல்வதும், எல்லாம் ஒரே நோக்கம்கொண்டேதான்—விளம்பரம் வேண்டும்—இந்தியாவைப் பற்றியும், அதை ஆளும் கட்சியின் திறமையைப் பற்றியும், பல்வேறு நாடுகளிலும், பெருமையாகப் பேசவேண்டும், என்பதுதான் நோக்கம்.

இந்தியாவை, உலகம் போற்றிப் புகழக் கூடாது என்றோ, புகழத் தேவையில்லை என்றோ, அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவே கூடாது என்றோ கூறும் குளத்தங்கரைக் குப்பண்ணுவல்ல நாம். நாம் கூறுவது, இந்த விளம்பர காரியத்துக்காக வாரியிறைக்கப்படும் பணம், மிக மிக அதிகம், இந்தச் செலவு புண்ணைமூடப் புனுகு பூசும் காரியமாகிறதே தவிர, உண்மையாக, இந்தியாவின் புகழை உலகறியச் செய்ய உதவவில்லை, என்பதுதான். இந்தியா, வெளிநாடுகளிலே டாம்பீகமான விருந்துகள் அளித்து, தன்புகழைப்பரப்பஎண்ணுவது, ஏமாளித்தனம் மட்டுமல்ல, ஏழைகளின் வரிப்பணத்தை வீணாக்கும் துரோகச் செயலுமாகும்.

உலகையே அறைக்கூவி அழைக்கும், சோவியத் நாடு இப்படி வீண்செலவு செய்தா, தன் புகழைப்பரப்பிற்று. இப்போதுதான் டில்லியிலே ஒப்புக்கு ஒரு சோவியத் தூதவராலயம் இருக்கிறது! ஆனால், இந்த அமைப்பு ஏற்படுவதற்குப் பலப் பல ஆண்டுகளுக்கு முன்பே, சோவியத்தின் புகழை, நாம், அந்நாடு, வெற்றிகரமாக நடத்திக்காட்டிய, ஐந்து வருஷத் திட்டங்களின் மூலம் அறிந்தோம். அதுபோல, உருவான ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்து, உலகின் மதிப்பைப் பெறலாம், பெற வேண்டும் என்ற நோக்கம் கொள்ளாமல், விளம்பரம் செய்வதற்கு, வித விதமான விருந்துகளும், பிரச்சாரம் செய்வதற்குப் பலரகமான பேர்வழிகளையும் பெரும்செலவில் ஏற்பாடு செய்வதும், தவறு, என்பதுதான் நமது குற்றச்சாட்டு. எத்தனை ஆயிரம் முறைதான், விருந்து நடத்தினாலும், இந்தியாவின் நிலைமை, வெளிநாட்டவரின் கண்களிலிருந்து மறைத்துவிட முடியாது. விருந்தளிக்கும் சர்க்காரின் ஆட்சியின் கீழ் கோடிக்கணக்கான மக்கள், வேதனை தரும் வாழ்விலேதான் உள்ளனர் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளாதிருக்க முடியாது. புள்ளி விபரங்களைக் கண்டு அவர்கள் நிலைமையைத்தெரிந்து கொள்ளக்கூடியவர்களே, புன்னகையாலும் பூச்செண்டாலும் ஏமாற்றிவிட முடியாது என்பதை அறியாமல், வீண்வேலைக்கு, ஏராளமான பணத்தை வாரி இறைப்பதைக் கண்டிக்கிறோம்.

மதிப்பு உயரவேண்டுமானால், கீர்த்தி வளரவேண்டுமானால், உலகின் நோக்கம் இப்பக்கம் திரும்பவேண்டுமானால், விளம்பர வாணவேடிக்கைகளல்ல, மக்களின் வாழ்விலே புதிய மலர்ச்சியைக் காட்ட வேண்டும், தொழில் வளம் பெருகி இருப்பதைக் காட்டவேண்டும், உலகினர் முயன்று பார்த்துத் தோற்றுப்போன துறையிலே வெற்றி காட்டிட வேண்டும், உலக மக்களின் உயர்வுக்கும் உபயோகத்துக்கும் தேவைப்படும், ஏதேனும் ஒரு பொருளையேனும், நாம் தயாரித்துக்காட்ட வேண்டும்,

நேர்த்தியான ஆடைகளை அணிந்து கொண்டு நமது தூதுவர்கள், நேரம் தவறாமல், பாரிஸ் விருந்திலும் சீமைக்களியாட்டத்திலும், வாஷிங்டன் வைபவத்திலும் கலந்துகொள்வதால், உண்டாகக் கூடிய மதிப்பைவிட, அந்த வெளிநாட்டுத் தலைநகர்களிலே, இது இந்தியாவில் தயாரிக்கப்பட்டது என்ற சின்னத்துடன், அந்த நாட்டவர் செய்தறியாத, ஆனால் தேடி அலைந்த பொருளை, கருவியை, நாம் காட்டினால், நாட்டின் மதிப்பு பலப் பல ஆயிரமடங்கு அதிகமாக உயரும்—கீர்த்தி பரவும். உலகுக்கு நாம் தாராளமாகவும் ஏராளமாகவும்அனுப்பும் பொருள் என்ன? விஞ்ஞானக் கருவிகளா! இல்லை! இல்லை! வெட்கப்பட்டுப் பயன் இல்லை, நாம் அனுப்புவது, கோணிப்பைகள்! சாக்குகள்! எப்படி, இந்தியாவின் மதிப்பு உயரும்? கோணிப்பைகளையும், வேதாந்த பேச்சுகளையும் ஏராளமாக அனுப்பும் நம்மை, ரேடியோவும், ரயில்வேயும், அனுப்பும் நாட்டார், என், மதிக்கப்போகிறார்கள்! தொலை நோக்கியை அனுப்பும்நாட்டாரின் மதிப்பை, ஏராளமான பொருட் செலவிலே, வலைவீசிப் பேச்சினரை அனுப்பிப் பெற முடியாது. விளம்பரம் பெறச் செலவிடும் பணத்தையும் அதற்காகச் செலவிடும் நேரத்தையும், இங்கே நாட்டின் நிலையை உயர்த்தப் பயன்படுத்தினால், பலன் நிச்சயம் ஏற்படும். அந்த நன்னோக்கத்துடன் இதனை எழுதுகிறோமே தவிர, நையாண்டி செய்ய அல்ல. நாடு க்ஷீணித்து வருகிறது—மக்களின் வாழ்வு தேய்ந்து வருகிறது—செல்வம் அழிகிறது—இந்நிலையை மறைக்க, விளம்பரப் படுதாக்களைத் தயாரிக்கிறார்கள்! வீண் வேலை மட்டுமல்ல, விபரீதமான காரியமும் கூட!

வெளிநாட்டு நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், காணவும் மகிழவும், திட்டங்கள் போர் போராகக் குவிக்கப்படுகின்றன! ஆராய்ச்சி நிலையங்களைக் காணீர்! தொழில் வளம் காணும் சாலைகளைப் பாரீர்! கலைக் காட்சியைப் பாரீர்! — என்று காட்டப்படுகிறது. ஆனால், உண்மையான உருவான காரியமாற்ற இந்த அமைப்புகள் பயன்படுகின்றனவா, என்று பார்த்தால், இல்லை, என்று நேர்மையாளர் எவரும் கூறுவர். விவசாயத்தை வளமாக்க, இதோ திட்டம்! — என்று காட்டுகிறார்கள். படித்து முடித்ததும் பூரிப்படைந்து, திட்டம், எந்த அளவு வெற்றி தந்திருக்கிறது, என்று கேட்டாலோ, முகம் மாறிவிடுகிறது, போதுமான பணம் கிடைக்காததால், திட்டத்தை இன்னும் துவக்கவில்லை, என்று கூறப்படுகிறது!

வாழ்க்கைத்தரம் உயரத் திட்டம்! வைத்தியத் துறைக்குத் திட்டம்! கல்வித் திட்டம்! காட்டாறுகளைக் கட்டுப்படுத்தும் திட்டம்! துறைமுக அமைப்புத் திட்டம்! தொழிலாளர் நிலை உயர்த்தும் திட்டம்!— என்று திட்டங்கள் பலப்பல, உள்ளன, டில்லியில், விளம்பரச் சாவடியில்! மக்களின் வாழ்வோ, கருகிக்கொண்டு வருகிறது!

வெளிநாடுகள் சென்றும், இங்கேயே இருந்துகொண்டும், ஏராளமான பணச் செலவில், நடத்தப்படும் விருந்துபசாரங்களைக் கண்டு களிக்கும், வெளிநாட்டு விற்பன்னர்கள், நம் நாட்டு மக்களின் வாழ்வு வதைக்கப்படுவதைக் கண்டு கொள்ளாமலில்லை. உள்ளூரச் சிரிக்கிறார்கள்! என்ன படாடோபம் இவர்களுக்கு! பன்னீர் தருகிறார்கள் நாம் கை கழுவ! கண்ணீர் சிந்தும் மக்களை நாம் காணாதிருக்க வேண்டுமென்பதற்காக, கானம் பொழிகிறார்கள் நம்முன்! — என்று எண்ணுகிறார்.

ஒவ்வொரு நாடாகத் தேடித் தேடித் தூதுவர்களை அனுப்பும் இந்தத் துரைத்தனத்தாரின் ஆளுகையின்கீழ் வந்துள்ள இந்நாட்டிலே, இப்போது, ஆண்டு தோறும் ஒரு கோடி மக்கள், மலேரியாவால் தாக்கப்படுகிறார்கள் — இருபது இலட்சம் மக்கள் ஆண்டுதோறும் இந்நோயால் இறந்துபடுகிறார்கள். எலும்புருக்கி, நாட்டின் நாலு பாகங்களிலும் படை எடுத்துப் பலி கேட்டபடி இருக்கிறது! ஒவ்வொரு நோயும், ஏகாதிபத்யத்தை விரட்டிய நமது நாட்டவரை மிரட்டியபடி இருக்கிறது! அடக்கும் ஆண்மையாளர்களைக் காணோம்! எப்படி அடக்க முடியும்? இந்தப் பெரிய துணைக் கண்டத்திலே உள்ள முப்பது கோடி மக்களுக்கு, 47000 டாக்டர்களே உள்ளனர், 7000 நர்சுகளாம், 5000, மருத்துவ மாதுகளாம், 1000 பல் வைத்தியர்கள் தானும்! சர்க்கார் ஆஸ்பத்திரிகளில், நோயாளிகளுக்காக உள்ள படுக்கை, இந்தியா முழுவதும், 50,000! போதுமா! நோய் போகுமா! வாழ்வு துலங்குமா? இந்நிலையில் மக்களின் 'வாழ்வு' கவனிக்கப்பட்டு வருகிறது—இருமலால் மாய்ந்து போகும் 'இந்தியனை' உலகம் காணாதிருக்கும்பொருட்டு, இமயச் சிகரம் தீட்டப்பட்ட ஓவியத்தைக் காட்டுகிறார்கள்! தொத்து நோய் பரவும் நிலையை உலகம் தெரிந்துகொள்ளாதிருக்க, வெளி நாடுகளுக்குத் தூதுவர்களை அனுப்பி, இந்திய கலாச்சாரம், இந்திய அரசாங்கத்தின் அலுவல்கள் ஆகியவற்றைப் பற்றிப் பிரச்சாரம் செய்யச் சொல்கிறார்கள், பெரும் செலவிட்டு. மதிப்பு நிச்சயமாக உயராது! டில்லி சர்க்கார் நடத்தும், விளம்பரச் சாவடி, ஏழையின் முதுகுக்கு மற்றுமோர் பாரம்—அவனுக்கு ஏன் அது! ஏழைபங்காளர் என்று இவர்களை, மனதார அழைத்தானே, அதற்காகவா? நம்பினானே அதற்காகவா? பரிதாபம்! பரிதாபம்!!

●

அரசியல் திட்டம் அறிஞர் கருத்து

இந்திய துணைக் கண்டத்துக்கு இப்போது தயாரிக்கப்படும் அரசியல் திட்டத்தைப்பற்றி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்று பகுதிக் கழகத்தில் நவம்பர் முதல் வாரம் நடைபெற்ற விவாத விளக்கத்தின்போது, அரசியல் பேராசிரியர் தோழர் C. தங்கையன் அவர்கள், "மாகாணங்களுக்கு அதிகமான அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். உண்மையான மாகாண சுயாட்சி அமைவதற்கு வழி செய்ய வேண்டும். அடிப்படைத் திட்டத்துக்கு முரண் ஏற்படாத வகையில், ஒவ்வொரு மாகாணமும், தத்தமது அரசியல் திட்டத்தைத் தீட்டிக் கொள்ள தனித் தனி அரசியல் நிர்ணய சபைகளைக் கூட்டியிருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

அங்கே அப்படி!

அமெரிக்காவில், குடி அரசுக் கட்சியின் சார்பாக நின்று வெற்றி பெற்ற பீடர் மாக் என்பவர், தமக்கு, சட்ட சபை செல்வதால் கிடைக்கும் பணத்திலே சரிபாதியை, ஏழைச் சிறுவர்களுக்காகச் செலவிட்டு, அவர்கள், தலைநகர் சென்று ஆட்சி மன்ற அலுவல்களை நேரடியாகக் கவனித்து அறிவு பெறுவதற்குப் பயன்படுத்தப் போவதாகக் கூறுகிறார்.

பொறுப்பற்றவர்கள்

அரசியல் நிர்ணயசபையில், இந்த துணைக்கண்டத்துக்கான புதிய ஆட்சி முறைத் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான காரியத்தின்போது, சபை என்ன இலட்சணத்தில் இருக்கிறது! மெயில் நிருபர் புதுடில்லியிலிருந்து எழுதுகிறார், "இப்போதுள்ளது போல, உப்புசப்பற்ற முறையில், சபை எப்போதுமே இருந்ததில்லை. மெம்பர்கள் உட்காருமிடத்தில், பாதி காலியாகவே இருக்கிறது. பார்வையாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடமும் காலி! பத்திரிகை நிருபர்கள்கூட அக்கறை காட்டக் காணோம்"

அரசியல் நிர்ணயசபைக்குச் சென்றுள்ளவர்களின், பொறுப்புணர்ச்சியைப் பாருங்கள்!

இதோ, நல்வழி!

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு கட்சி — நகரங்கள் நாசத்தின் இருப்பிடம், எனவே கிராமீய வாழ்க்கை முறையே எங்கும் இருக்கவேண்டும் என்று கொள்கைகொண்டு மற்றோர் கட்சி. இவ்விதம் கட்சிகள் அமைந்தால், இந்த இரு கட்சிகளில், எதற்கு நாடு ஆதரவு தருகிறதோ அந்த விதமாக நாடு, உருவாக்கப்படும். இந்த இரு வகைக்கொள்கையையும் கொண்டவர்கள் ஒரே கட்சியிலிருந்து, அந்தக் கட்சியே நாட்டை ஆளத்தொடங்கினால், நாடு, என்ன உருவம் கொள்ள முடியும். கட்சியின் உருவம்கூட, எப்படிக் காணச்சகிக்கும்! திருநீறும் திருநாமமும் ஒருசேர நெற்றியில் அணிந்துகொண்டு, சிவராமசங்கீர்த்தனம் பாடினால், வேடிக்கையாக இருக்குமல்லவா! அதுபோலாகிவிட்டது ஆளும் வாய்ப்பைப் பெற்ற கட்சியின் போக்கு. இதிலே, யானையிடம் மாலையைக்கொடுத்து, அது யார் கழுத்தில் மாலையைப் போடுகிறதோ அவரை அரசனாகக்கொண்டு அந்த அரசனை ஆண்டவனுக்கு அடுத்தபடி என்று நம்பி அடக்க ஒடுக்கமாக நடந்துகொள்ளவேண்டும் என்ற விதமான அரசியல் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களும் உள்ளனர், அமெரிக்க நாட்டு அரசியல் முறையைத் திருத்தி, ஆஸ்திரேலிய நாட்டு ஆட்சி முறையில் ஒரு பகுதியைப்புகுத்தி, சோவியத்முறையைச் சிறிதளவு கலந்து, பிரிட்டிஷ் பிடிவாதத்தையும் பிரன்ச்சு பசப்பையும்சம எடையாகக் கலந்து புகுத்தி, அதே போது "இந்தியப்பண்பாட்டை" இழந்துவிடாதபடியும் பார்த்துக் கொள்ளும் விதமான அரசியல் தத்துவத்தை நாடுபவர்களும் இருக்கிறார்கள். ஜில்லாபோர்டுகள் ஒழியவேண்டும் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள்— ஒழியக்கூடாது, போர்டுகளுக்கு மேலும் அதிகமான அதிகாரம் அளித்து அமைக்கவேண்டும் என்பவர்களும் இருக்கிறார்கள். அரிசியைத்தீட்டிச்சாப்பிட வேண்டும்என்பார் உண்டு! தீட்டுவது தீது என்பாரும் உண்டு, ஆலைகள் வேண்டும் என்பார் உண்டு, ஆலைகள் வேண்டாம் என்பார் உளர்! விவாகவிடுதலை என்ற பேச்சேவிநாசகாலத்தால் ஏற்படும் விபரீதபுத்தியின் விளைவு என்று பேசுபவர் உண்டு! தசரதனைக் காட்டி, 'ஏகதாரம்' என்ற கட்டுப்பாடு கூடாது என்று வாதிடும் பேர்வழிகள் உண்டு, அவர்மகன் ராமன் மீது ஆணையிட்டு 'ஏகதாரம்' எனும் முறைதான் சட்டமாக வேண்டும் என்று கூறுவோர் உண்டு! ஜான்சி ராணியை சாட்சிக்கு அழைக்கும் வீரர்களும், சாவித்திரியைச் சாட்சிக்கு அழைக்கும் பக்தர்களும், புதுமை விரும்பிகளும் பழமைக் கொள்கையினரும், சகல வகையினரும், கொண்டதாகிவிட்டது, காங்கிரஸ் கட்சி. ஆகவே, அதன் ஆட்சிக்கு உட்பட்ட நாடு, என்ன உருவம் பெறும், என்று எவ்வளவுபெரிய நிபுணராலும் கணிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் எல்லோருமே, கதருடையினர், காங்கிரஸ் கட்சியினர், எனவே ஒவ்வொருவரும் தமது நினைப்பே சரி, என்று கருதுகிறார் — அந்த நினைப்பின்படி நாடு ஆளப்பட்டால்தான் நன்மை கிடைக்கும் என்று எண்ணுகிறார், அந்த முறைதான் காங்கிரசின் உண்மையான திட்டம் என்று கருதுகிறார். இது, மக்களை மருளச்செய்யும் முறை— வாழவைக்கும்முறையல்ல! எல்லோரும் ஒரே கட்சியின் பெயரைக்கூறிக்கொண்டு, ஒரே பெட்டிக்குள் பதுங்கிக்கொண்டவர்கள், என்பது தவிர, இவர்களுக்குள், ஒன்றுபட்ட கருத்து, அரசியல் நிர்ணய சபை விவகார முதற்கொண்டு அரிசிப்பிரச்னை வரையிலே, எதிலும் இல்லை—எதிலும் இருக்கமுடியாது—காரணம், இவர்கள் யாரும், இன்னின்ன முறைகள் கொண்டு ஆட்சியை நடத்தபோகிறோம், என்று மக்களிடம்கூறி, ஓட்டு வாங்கினவர்களல்ல! திருப்பதி மலைமீது ஏறும்போது, திருட்டுக் கந்தனும் பக்த முத்தனும், ஒரேவிதமான குரலிலேயே, ஏழுமலையானுக்குக் கோவிந்தா போட்டார்கள்—திரும்பும்போது முத்தன் இழந்தது முன்னூறு ரூபாய் பெறுமானமுள்ள மோதிரம், கந்தனுக்கு வரவு அந்தத் தொகை, எல்லாம் ஏழுமலையான் திருவருள்தான்!—என்பது போல, எல்லோரும் ஒரே கட்சியின் பெயரைக் கூறிக்கொண்டுசென்றவர்களே தவிர, அவர்களில், பலவகையினர் உண்டு—அவரவர்களின் திறமைக்கு ஏற்றபடி பலனையும் தேடிக்கொள்கிறார்கள்.

கலெக்டரையும் கன்ட்ரோல் ஆபீசரையும், மிரட்ட, கதர் பயன்படுகிறது, போதாதா இது என்று எண்ணிப் பூரிக்கும் 'புண்யவான்கள்' மிருந்துவிட்டனர். மந்திரிகளை மடியில் வைத்திருக்கிறேன்—கவர்னரைக் கைக்குள் வைத்திருக்கிறேன்—நேருவிடமிருந்துநேற்றுக்கூடரிப்ளைகார்டு வந்தது, படேலுக்கு பழனியாண்டவர் விபூதிபார்சல்செய்திருக்கிறேன், பக்தவத்சலம், என்னைப்பார்க்காவிட்டால் தூங்கமாட்டார் அவ்வளவுபிரியம் என்னிடம், என்று, இதுபோன்ற பலவகைப் பேச்சுப் பேசி, மிரட்ட, பயக்க, பயிற்சி பெறும் அளவுக்கு இந்த சட்டசபை மெம்பர்கள், பிரச்னைகளை விவாதிக்க, திட்டங்களைத் தீட்ட, மசோதாக்கள் தயாரிக்க, பயிற்சி பெற்றனரா, என்று யோசித்தால் நேர்மையுள்ள எந்தக்காங்கிரஸ்காரரும், வெட்கமும் துக்கமுமடைய வேண்டியதுதான். பண்பற்றவர், பயிற்சியற்றவர்; பொறுப்பை மறந்தோர், பொதுமக்களைக் காணாதார், அக்கரையற்றவர், ஆள்விழுங்கி, இச்சகம் பேசுவோர், உருமாறிகள், என்று இவ்விதமாக ஒரு பட்டியே தயாரிக்கலாம், ஆளவந்தோம் என்று கூறிக்கொண்டவர்களை. இது, மக்களாட்சி முறையல்ல—கட்சிப் பற்று காரணமாக இந்த நிலையை வளர விடுகிறார்கள், இது மிகமிக ஆபத்து என்பதைநாம்பலமுறைவலியுறுத்திக் கூறிவந்தோம். சட்டசபை அங்கத்தினர்களின், தான்தோன்றித்தனத்தைத் தட்டிக்கேட்கும், கடமை மக்களைச்சார்ந்தது, என்பதை எடுத்துக் காட்டினோம்.

"போதுமக்கள், இப்படித் தான்தோன்றித்தனமாக நடந்துகொள்ளும் சட்டசபையினரை, என்னசெய்யமுடியும்? அடுத்த தேர்தல் வரையிலே, இவர்கள்தானே இருப்பார்கள்—இவர்களைப் பொதுமக்களால் இப்போது நீக்கவும் முடியாதே—இவர்களை மிரட்டி வேலைவாங்க ஒரு எதிர்க்கட்சி இல்லையே, என்னசெய்வது என்று கேட்பார்கள் பலர்.

இதுபற்றி, காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கு உழைத்த உண்மை ஊழியர்கள் சிந்தித்து, சற்றுக் கடமையிலே கவலைகொண்டால், அவர்களைத் திருத்தமுடியும்; பொதுமக்களைத் திரட்டவேண்டும் அதற்கு.

சட்டசபையிலேசென்று அமர்ந்துவிட்டதாலேயே, அடுத்த தேர்தல் வரையிலே, அவர்களை யாரும் அசைக்கவே முடியாது, என்று எண்ணத் தேவையில்லை. தேர்தல் தவிர, வேறு ஆயிரம் வழிகளுண்டு

அவர்களைத்திருத்த. போதுமக்களின் நம்பிக்கையை அந்த மேம்பர்கள் இழந்துவிட்டனர் என்பதை அவர்கள் உணரும்படி செய்யமுடியும்—கண்டனக்கூட்டங்கள் மூலம்—மகஜர்கள் மூலம்—பேட்டி கண்டு பேசுவதன்மூலம்

உமது கடமையைச் செய்யத் தவறிவிட்டீர்—உமக்குச்சட்டசபை வேலையிலே அக்கரையும் காணோம் திறமை இருப்பதாகவும் தெரியவில்லை—நமதுதொகுதியின்தேவைகளைப் பற்றி, இதுவரை, சட்டசபையிலே, பேசக்கூட இல்லை—இப்படிப்பட்ட உம்மை, எமது பிரதிநிதியாகக் கொண்டு, நாங்கள் என்ன பலனை அடையமுடியும்? ஆகவே, தயவுசெய்து ராஜிநாமாச் செய்து விடுங்கள்—என்று விளக்கிட மக்கள் முன் வரவேண்டும்.”

என்று 7-11-48ல்எழுதினோம். எழுதும் நாம் வேறு கட்சியினர், என்பதற்காக, உண்மையை உட்கொள்ள மறுக்கும் ‘உத்தமர்கள்’ ஏராளம் இங்கு! ஆனால், பொறுப்புணர்ச்சி அடியோடு போய்விடவில்லை! பண்பு, பட்டமரமாகிவிடவில்லை! அங்கொன்றும் இங்கொன்றுமாகத் துளிர்விடக் காண்கிறோம்—களிக்கிறோம்.

தமிழ்நாடு காங்கிரசின் தலைவர், அமைச்சர்களை ஆக்கவும்அழிக்கவும் ஆற்றலிருப்பதாகக் கூறிக்கொள்ளும் ஆண்மையாளர், காமராஜ்—அருப்புக்கோட்டைத் தொகுதி மக்களின் அன்பையும் ஆதரவையும் கொண்டுதான் சட்டசபை சென்றார். அருப்புக்கோட்டைப் பொதுமக்கள், அவரால், தமது பகுதி நலன் பல பெறும் என்று நம்பினர்—இலவுகாத்த கிளிகளாயினர்—தவறு தவறு—கிளிகளல்ல, அவர்கள், விழிப்புணர்ச்சியுள்ள வீரர்கள், எனவேதான், அருப்புக்கோட்டை சென்று அரசியல் மாநாடு நடத்தி இந்தி எதிர்ப்பாளரைக் கண்டிக்கும்பணிபுரியக் காமராஜர் சென்றபோது, மக்கள், திரைமறைவில் அல்ல, கூட்டத்தில் குழப்பம் விளைவித்து அல்ல, சுவரிலே கிறி அல்ல, வெளிப்படையாக, அச்சடித்ததாளின் மூலம், தமது அதிருப்தியை, கண்டனத்தைத்தெரிவித்தனர். “ஐயா, M.L.A ! அருப்புக்கோட்டை வட்டார மக்களிடம் ஓட்டு பெற்றுச் சென்ற ஆண் சிங்கமே! இதுவரை, எங்கே போயிருந்தீர்? என்னசெய்துகொண்டிருந்தீர்? உம்மாலே, எமக்கு ஏற்பட்ட உருவான பலன் ஏதேனும் உண்டா, விரலைவிடும்? எமது நலனைப் புறக்கணித்துவிட்டு, ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறீரே! இதுநியாயமா? எங்கள் நம்பிக்கையை இழந்து விட்டீர், என்பதை அறியுங்கள்!” என்று அச்சடித்துக் கொடுத்தனர். அடியும் பட்டனராம் பிறகு, போலீசிடம். ஓட்டுகளைப் பெற்றுக்கொண்டு, அன்பு ஒழுக ஒழுகப் பேசிவிட்டுச் சென்ற காமராஜர், பிறகு ஒரு காரியமும் செய்யாதது கண்டு, அந்த மக்கள் கொண்ட வேதனையை விடப் போலீசார் அடித்தபோது ஏற்பட்ட வேதனை, குறைவானதுதான்,என்றே கூறுவோம். ஜனநாயகக் கோட்பாட்டுக்காக அந்த மக்கள் அடிபட்டனர் அந்த வீரத்தை நாம் பாராட்டுகிறோம்—பொறுப்புணர்ச்சியைப் போற்றுகிறோம். ஓட்டுகளைக் கொடுத்துவிட்டதாலேயே எமது உரிமைகள் யாவும் போய்விட்டன என்று எண்ணுதீர், எமதுநம்பிக்கையைப் பெற்று இருக்கும் வரையில் தான், நீர் M. L. A. வாக வீற்றிருப்பது கண்ணியமான செயல்! எங்களுக்கு உம்மிடம் நம்பிக்கை இல்லை, என்பதைத் தெரிந்து கொள்ளுக—ராஜிநாமாச் செய்க!—என்று கூறிய, அந்த வீரர்களின் பண்பைக் கண்டு பூரிக்கிறோம். தமது தொகுதி வாக்காளர்கள், தம்மிடம் நம்பிக்கை இல்லை என்பதை, டட்டப்பகலில், வெட்டவெளிச்சமாக, பளிச்செனத் தெரியும் விதத்தில் அச்சடித்துக் கொடுத்தும், இன்னமும், தமது பதவியை ராஜிநாமாச் செய்யாதிருக்கும், காமராஜரின், பண்பும், விளங்குகிறது! நன்றாக! மிக மிக நன்றாக!! நாம் எது நடைபெற வேண்டுமென்று, கோரினோமோ, அந்த முறை, அருப்புக்கோட்டை அளவோடு அல்ல, மேலும் பல இடங்களிலும் பரவி வருகிறது, ஜனநாயகம் பிழைக்க வழி கிடைத்து வருகிறது.

“நாங்குனேரி, அம்பாசமுத்திரம் ஏரியா சட்டசபை மெம்பர் ஸ்ரீமதி லட்சுமி அம்மாள், இந்த ஏரியாவுக்கு வராமலும்,ஜனங்கள் குறைகளை கவனியாமலும் இருப்பதைக்குறித்து அவர் உடனே தாம் வகிக்கும் பதவியை ராஜிநாமாச் செய்யும்படி கோருகிறது. அவர்மேல் நம்பிக்கை இல்லை என்பதாக இக்கூட்டம் தீர்மானிக்கிறது.”

* இந்தத்தொகுதிக்கு வந்ததில்லை.
* மக்கள் குறைகளைக் கவனித்ததில்லை!
* ஆதலால் நம்பிக்கை இல்லை!
* எனவே இராஜிநாமா செய்ய வேண்டும்.

தமது தொகுதி வாக்காளர்களை, தம்மைத் தேர்ந்தெடுத்தனுப்பிய மக்களை, தேர்தலுக்குப் பின்னர்சந்தித்ததில்லை. அவர்கள் நிலை என்ன — குறை என்ன — தேவை என்ன — ஒன்றும் கேட்டதில்லை. வாக்காளர்களை மதித்து நடக்கவில்லை. அவர்கள் வாக்குகளைப்பெற்று, அவ்வாறு வாக்களித்தவர்களுக்குச் சேவை செய்யவேண்டிய கடமையிலுள்ள, தோழியர் இலட்சுமி அம்மாள், கடமையைத் தவறிவிட்டதால்,வாக்காளர்கள் அம்மையாரின்மீதுகொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். எனவே தீர்ப்பு அளிக்கப் படுகிறது வாக்காளர்களால்.

இவ்வாறு தீர்ப்பளிக்கிறவர்கள் யார் என்று எண்ணுகிறீர்கள்? இம்மாதம் முதல் தேதி, திசையன் விளை எனும் ஊரில் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், சுமார் ஆயிரம் மக்களுக்கு முன்னால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும் இது. 5—11—48 ‘தினசரி’ இதழில் இது இருக்கிறது.

இதோ மற்றொன்று!

திருநெல்வேலி — பாளையங்கோட்டை தொகுதியின் பிரதிநிதியாக வழக்கறிஞர் தோழர் வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் சென்னைசட்டசபை அங்கத்தினராக இருந்து வருகிறார். இவர்மீது பல குற்றங்களைக் காட்டி, எனவே நம்பிக்கை இல்லை என்று குறித்திருக்கிறார்கள். தீர்மானம் இதோ:—

“இவர்மீது திருநெல்வேலி—பாளையங்கோட்டை பொதுஜனங்களிடையே ஏராளமான புகார்கள் இருந்து வருவதாலும், தொகுதி மக்களின் நன்மைக்காக உழைக்கவில்லையாதலாலும், ஜவுளி-நூல் கண்ட்ரோல் விஷயத்திலும் மற்றும் பல விஷயங்களிலும் நெசவாளர்களும் பொதுமக்களும் புகார் கூறக்கூடியமுறையில் அவர் நடந்து வருவதாலும்

(2-ம் பக்கம் பார்க்க)

சென்றவாரத் தொடர்ச்சி.

சீனு சிவப்பாகிறது!

—※—

1919-ல் ஜப்பான் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி துவக்கப்பட்டது. ஜப்பானியத் துணிகளை வாங்குவதில்லை என்கிற உறுதி கொண்டனர் தென்பகுதியிலுள்ள சீனர்கள். சீன ஆலைமுதலாளிகளும், ஆங்கில—அமெரிக்க ஏகாதிபத்தியங்களும் இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டி வளர்த்தன. முக்கிய வியாபார நகரமான ஷாங்காயில் தான் இந்த இயக்கம் பலமாக நடத்தப்பட்டது. தொழிலாளர்கள் பேராதரவு காட்டினர். மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் தொழிலாளர்களோடு ஒன்றுபட்டு நின்றனர். சீனாவின் புரட்சிக்கு இங்கு தான் முதல் முதலாக வித்திடப்பட்டது. இதன் விளைவாக ஜப்பானிய ஏகாதிபத்தியம் ஷாங்காயில் குலைந்தது.

ஜப்பானை எதிர்த்ததோடு, இந்தப் புரட்சி இயக்கம் மங்கிவிடவில்லை. தொழிலாளர்களின் இயக்கம் வலுவடைந்தது. தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்றும், அதற்குள்ள ஒரே வழி எல்லா ஏகாதிபத்தியங்களின் பலத்தையும் தொலைப்பதுதான் என்றும் தொழிலாளர்கள் முடிவு கட்டினர். அன்னியர்கள் பிடியில் இருந்த தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் செய்வதென முடிவிற்கு வந்தனர். இந்த இயக்கம் 1922-ல் பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக இருந்த ஹாங்காங் நகரில் உச்சநிலை பெற்றது. ஆண்டு ஆரம்பத்தில் 30000 துறைமுகத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். கூலி உயர்வு கேட்டனர். இரண்டு திங்கள் ஹாங்காங் துறைமுகம் வேலையற்றுக் கிடந்தது. சர்க்கார் தலையிட்டது. தொழிலாளர் சங்கத்தைச் சட்ட விரோதமாக்கிற்று. தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இராணுவச்சட்டம் அமுல் செய்யப்பட்டது. இதன் விளைவாக மற்றத்துறைகளில் வேலை செய்து வந்த இரண்டு லட்சம் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாக ஹாங்காங்கில் தொழிலாளர்கள் செய்த வேலை நிறுத்தம், சீனா முழுவதிலும் உள்ள தொழிலாளர்களுக்கு ஆர்வம்கொடுத்தது. ஷாங்காய், காண்டன், ஹான்காவ், டையென்ட்சின், முதலிய நகரங்களிலுமுள்ள தொழிலாளர்கள் அனுதாப வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். அனுதாப ஊர்வலங்கள்—கண்டனக் கூட்டங்கள் முதலியன நடைபெற்றன. மாணவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். சீன முதலாளிகளும் பணம் கொடுத்து இயக்கத்திற்கு ஆதரவு காட்டினர். சிறுவியாபாரிகளும் பணம்கொடுத்து உதவினர். முன்னர் ஜப்பானியர்கள் நஷ்டமடைந்ததுபோலவே, முடிவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யமும் இந்த மக்கள் இயக்கத்தால் பாதிக்கப்பட்டது. துறைமுகத் தொழிலாளர்கள் வெற்றி பெற்றனர். இருபது சதவிகிதம் கூலி உயர்வு பெற்றனர். வேலை நிறுத்த காலத்தின் சம்பளத்தையும் பெற்றனர். காண்டனில் இருந்த சீனசர்க்காரும் இதற்குத் துணையாக இருந்தது. எனவே, இத்தொழிற்சங்கத்தின் தலைமை ஸ்தாபனம் காண்டனுக்கு மாற்றப்பட்டுவிட்டது. காண்டனில் அரசாங்கத்தை நடத்திவந்த கோமின்டாங், இறுதியில் ஏகாதிபத்திய எதிர்ப்பில் கலந்துகொள்ளவேண்டியதாகப் போய்விட்டது இதனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இதனை எதிரியாக பாவித்து, இதனைக் கவிழ்க்கச் சதி செய்தது. வெற்றியும் பெற்றது. காண்டன் சர்க்காரில் முக்கியஸ்தராக இருந்த சன்யாட்சன் விரட்டப்பட்டார். பின்னர் சன்யாட்சன், சோவியத் நாட்டின் உதவியால்காண்டனில் மீண்டும் தேசிய சர்க்காரை நிறுவுவதில் வெற்றி கண்டார்.

ஜப்பான் துணி பகிஷ்காரம் என்பது இருபக்கத்திலும் கூர்மையுடைய கத்தியைப்போன்றது. பகிஷ்கார இயக்கத்திற்கு உள்நாட்டு ஆலைமுதலாளிகளின் ஆதரவு கிடைப்பது போலவே, ஜப்பான் துணிகளைவிற்று வந்தவியாபாரச்சீமான்களின் எதிர்ப்பையும் இயக்கத்திற்குத் தேடித்தரக்கூடியது. வியாபாரச் சீர்குலைவு பொதுவாக எந்த முதலாளியாலும் விரும்பக்கூடியதன்று. ஹாங்காங் துறைமுகத் தொழிலாளர் பெற்ற வெற்றியும், வேலை நிறுத்தத்தில்மற்ற நகரங்களில் இருந்த தொழிலாளர்கள் தந்த ஒத்துழைப்பும், நீண்டகாலமாக அரசியலில் பங்கு கொண்டிருந்த போர்த்தலைவர்கள்மட்டுமன்றி, நாட்டில் வேறோர் முக்கியமானபுதிய இயக்கம் உருவாகிறது என்பது போர்த்தலைவர்களுக்கும் அமெரிக்க — ஆங்கில ஏகாதிபத்யங்களுக்கும், சீனமுதலாளிகளுக்கும் விளக்கமாகத் தெரியவந்தது.

இந்தச் சூழ்நிலையில், நாடெங்கும் சிதறிக்கிடந்த தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி, ஸ்தாபன ரீதியில் தொழில் ஸ்தாபனத்தை அமைப்பதற்காக, ஒருதொழில் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. 1922-ல் காண்டனில் 200 தொழிலாளர்கள்கூடி, ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிராகச் சீனாவை விடுவிக்க முயற்சிப்பது என்று தீர்மானித்தனர்.

இந்தத்தீர்மானம் சீனாவைச் சுரண்டிவந்த ஏகாதிபத்யங்களுக்கு எரிச்சலை உண்டாக்கியது. தொழிலாளர் இயக்கத்தை நசுக்குவதனால் தான் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமென்று ஏகாதிபத்தியங்கள் முடிவிற்கு வந்தன.

வெளி நாட்டார் தொழிற்சாலைகளில்மட்டும்வேலைநிறுத்தம் செய்து, அங்குள்ள தொழிலாளர்களின் குறைகள் களையப்பட்டு விடுவதோடு மட்டும் தொழிலாளர் இயக்கப் பணி நின்று விடாது. மேலும் அது, உள்நாட்டு முதலாளிகளின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைகளைக் களையவும் முற்படும். ஆரம்பத்தில் இந்த நிலை வெளிப்படையாகத் தெரியவில்லை யாயினும், காலப்போக்கில் இந்த உருவத்தைத் தொழிலாளர் இயக்கம் பெற்றே தீரும் என்னும் பேருண்மையை, அனுபவ வாயிலாகச் சீன முதலாளிகள் நன்கு உணர்ந்து கொண்டனர். எனவே, அவர்களும் ஏகாதிபத்தியங்களுடன், தங்களுக்குள் இருந்த பிளவுகளை நேர் செய்துகொண்டு, தொழிலாளர்களை நசுக்குவதில் ஒன்று திரண்டனர்.

ஷிவிபிதுன்ன நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களிடம் அடக்குமுறை ஒத்திகை ஆரம்பிக்கப்பட்டது. 1922-ல் ஆயுதம் தாங்கிய போலீஸ் படை, தொழிலாளர்களைச் சுட்டுப் பொசுக்கியது. அந்த அடக்குமுறை நாடகம், பிரிட்டிஷ் முதலீட்டில் நடைபெறும் பீக்கிங்—ஹான்கௌ இரயில்பாதையில் துவக்கப்பட்டது. அத்தொழிலில் சிதறிக் கிடந்த

தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. அதற்காக ஒருமாநாடு கூட்டுவதென இரண்டு மாதங்களாக முயன்று வந்தனர். கடைசி நேரத்தில், மாநாட்டுப் பிரதிநிதிகளில் பலர் குறிப்பிட்ட இடத்தில் கூடிவிட்ட பின்னர், மாநாடு கூட்டக் கூடாதென, சர்க்கார் தடை உத்தரவு பிறப்பித்தது. தடையை மீறிக் கூடினர்; முதல் தீர்மானமாக இராணுவ முறையைக் கண்டித்தனர். மாநாடு கூடின கட்டிடத்தை முற்றுகை இட்டு, தலைவர்களைக் கைதுசெய்து தண்டித்தது சர்க்கார்.

சர்க்காரின் விரும்பத்தகாத இப்போக்கினைக் கண்டிக்க, வேலைநிறுத்தம் துவக்கப்பட்டது. கூட்டம் கூடும் உரிமையைச்சர்க்கார் தடுத்துவிடவே, சாதாரண மக்கள் கொதித்து எழுந்தனர். சர்க்கார் போக்கைக் கண்டித்தனர். மாநாட்டைக் கலைத்துத், தொழிலாளர் தலைவர்களைக் கைதுசெய்த, அதிகாரிகளை விசாரித்துத் தண்டிக்கவேண்டுமென்று மக்கள் அறிவித்தனர். நிலைமை நெருக்கடியாயிற்று. நிற வேற்றுமை பாராமல் முதலாளிகள் ஒன்றுபட்டனர். கிளர்ச்சியை ஒடுக்கத்தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமெனச்சர்க்காரைத் தூண்டினர். எழுநூறுமைல் நீளமுள்ள இரயில்வே பாதையில் வேலை செய்துவந்த தொழிலாளர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர். காட்டுப்போக்கில், தொழிலாளர் தலைவர்கள் பட்டப்பகலில், நடுத்தெருக்களில், தூக்கிடப்பட்டனர். இதே நேரத்தில் தொழிற்சாலைகள் மிகுதியாக உள்ள நகரங்களில் எல்லாம், தொழிலாளர்களை நசுக்குவதில் சர்க்கார் மும்முரமாகத் தலைப்பட்டது. வெற்றியும் கண்டது. தொழிலாளர்கள் தோற்றனர், ஆயினும் உற்சாகம் குன்றவில்லை; கட்டுப்பாடும் குலையவில்லை.

தொழிலாளர் இயக்கம், தனது விடுதலைக்கிளர்ச்சிக்கேற்ற இடமாக ஷாங்காய் நகரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. ஷாங்காயின் முடிவுதான், நாளை வடசீனத்தில் எதிரொலிக்கும் எனவே, தங்களின் மறுபோராட்டத்திற்கு, அங்கு தொழிலாளர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். இதே நேரத்தில் காண்டனிலும் தொழிலாளர் இயக்கம் முன்போல் உருவாகிக் கொண்டிருந்தது.

1925-மேமாதம், டிஷிங்டோநகரிலிருந்த ஜப்பான் பஞ்சாலையில் வேலைநிறுத்தம் ஏற்பட்டது. அந்தப் பிரதேசத்தை ஆண்டுவந்த சீனகவர்னர் ஜப்பான் சிருஷ்டியாவர். உடனே, வேலைநிறுத்தத்தை முறியடிக்க இராணுவத்தை ஏவினார். ஷாங்காய் நகரில் ஜப்பானிய ஆலைகளில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் அனுதாப வேலைநிறுத்தம் செய்தனர். அங்கும் ஜப்பான் போலீசும், சீன இராணுவமும் தொழிலாளர்களை நசுக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டன. வேலை நிறுத்தத் தலைவரைக் கைது செய்து கொன்றது. வேலைநிறுத்தம் மற்றத் தொழிற்சாலைகளிலும் பரவியது. இயக்கத்தின் சில தலைவர்களைப் பிரிட்டிஷ் போலீஸ் கைது செய்துவிட்டது. அவர்களைப் பலாத்காரமாக விடுவித்து விடுவது என்றுமக்கள் ஊர்வலமாகப்போலீஸ் நிலையத்தை அடைந்தனர். போலீஸ் கூட்டத்தை நோக்கிச் சுட்டது. பலர் உயிர் துறந்தனர்; பலர் படுகாயப்பட்டனர். இது நிகழ்ந்தது 30 மே 1925-ல்.

இதனால் மக்கள் உறுதி குலைக்கப்படவில்லை. மேலும் மக்கள் கொதித்தெழுந்தனர். பலதிறப்பட்ட மக்களும் கிளர்ச்சியில் பங்கு கொண்டனர். சீனாவில் வெளிநாட்டு முதலாளிகள் பெற்றுவந்த சலுகைகள் அனைத்தும் ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைக் கிளப்பினர். பிரிட்டிஷ் போலீஸ் பயந்து போயிற்று. அச்சம் அதற்கு ஏற்பட்டுவிட்டது. சீனத் துருப்புகளிடத்தில் அதற்கு நம்பிக்கை இல்லை. தமது இராணுவக் கப்பலிலிருந்து ஆயுதந் தரித்த இராணுவத்தினரை ஏவியது, இயக்கத்தை ஒடுக்க. கூட்டங்கள் கலைக்கப்பட்டன; ஊர்வலங்கள் தடை செய்யப்பட்டன; கூட்டங்களைப் பார்த்துச் சுடுவது சாதாரண சம்பவமாகிவிட்டது.

இந்த அடக்குமுறைகளாலும் மக்கள் கிளர்ச்சியை ஒடுக்க முடியவில்லை. வேறு முறையைக் கையாண்டது ஏகாதிபத்தியம். இயக்கத்தில் சேர்ந்திருந்தவர்களிடையே பிளவை உண்டாக்கும் செயலில் ஈடுபட்டது. இவ்வளவு கிளர்ச்சியிலும், சீன பஞ்சாலைகளில் வேலை செவ்வனே நடந்து வந்தது. அதற்கான மின்சாரத்தைத் தரமுடியாது என்று மின்சார உற்பத்திச் சாலையின் சொந்தக்காரர்களான பிரிட்டிஷார் கூறிவிட்டனர். உடனே சீன முதலாளிகளின் நாட்டுப் பற்று அவர்களை விட்டுப்பறந்து போய்விட்டது. இயக்கத்தைக் காட்டிக் கொடுத்தனர். மற்றவர்களும், தொழிலாளர்களைத் தன்னந் தனியாக விட்டுவிட்டு, இயக்கத்திலிருந்து விலகினர். இந்த நிலையிலும் தொழிலாளர்கள் ஆர்வம் குன்றாமல், ஒற்றுமை குலையாமல் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தினர்.

இதே சந்தர்ப்பத்தில், ஷாங்காய் அடக்குமுறை காண்டன் நகரை எட்டியதும், அங்கு மக்கள் விடுதலைக் கிளர்ச்சியைத் துவக்கினர். ஆங்கில — பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக காண்டனில் மக்கள் திரண்டனர். அங்குள்ள போலீஸ் கூட்டத்தை நோக்கிச் சுட்டது. இதற்குப் பழி தீர்க்கும் முறை

(7-ம் பக்கம் பார்க்க)

நவம்பர் வெளியீடு வெளிவந்துவிட்டது

"புது வாழ்வு"

ஆசிரியர்: க. அன்பழகன் M. A.,

✻

இவ்விதழில் ஈரோடு மாநாட்டு கருத்துரைகளும், கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

தனி இதழ் 0—4—0

விபரங்கட்கு:—

"புது வாழ்வு"

10, வெள்ளாளத் தெரு,

புரசைவாக்கம், சென்னை—7.

பொதுக்கூட்டம்

28—11—48-ல் ஜோலார்ப்பேட்டையில் தோழர் M. ஜயராம் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் அண்ணாத்துரை, E. V. K. சம்பத் ஆகியோர் பேசுவர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.